தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு கூகூஉ	மலர்
	பிலவ, பங்குனி.	•
லன	1962 மார்ச், ஏப்ரல்.	கஉ

"குழந்தை மொழி"

சோ. பரமசிவம், எம்.ஏ.,
பச்சையப்பன் கல்லூரி, சென்னை—30.

மக்கள் தங்களுடைய உள்ளத்தில் இருக்கக் கூடிய கருத்துக்களை வெளியே எடுத்துச் சொல்லவும் கேட்கக் கூடிய மக்கள் நன்கு பொருள் தெளிவுறும்படி விளங்கிக் கொள்ளவும் துணைசெய்யவல்லது மொழியாகும். எனவே சொல்லுகின்றவர்களுக்கும் கேட்கின்றவர்களுக்கும் பொருளை அறிவிக்கவும் அறியவும் கருவியாக அது இருக்கின்றது. பொருள் விளங்கும்படி இரு திறத்தினரும் அறிந்து கொள்ளும் விதத்தில் மொழி அமைந்திருக்க வேண்டும். அதைத்தான் மொழி என்று சொல்ல முடியும். தன்னுடைய வாயிலிருந்து வெளிக்கிளம்பும் ஒலிகளையெல்லாம் முறையில்லாமல் ஏதாவதொரு கருத்தைத் தெரிவிக்கச் சொன்னால் அது மொழியாகி விடாது. ஒலிகளின் துணையைக் கொண்டு கருத்தைத் தெரிவிக்கலாம்; ஆனால் கேட்கின்றவர்களுக்கும் புரியவேண்டுமே! இதை மொழி என்று சொல்ல முடியாது. உளரல் என்றுதான் சொல்ல வேண்டும். கேட்கின்றவர்களும் அதைப் புரிந்து கொள்ளும் பொழுதுதான் மொழியாகின்றது. 'ஆ' ஊ முதலிய ஓசைகளும் இப்படியே *மனிதன் பெற்ற பேறுகளுள் சிறந்தது பேசுவதற்குக் கற்றுக் கொண்டதுதான் என்று டேனிஸ் தத்துவஞானி குறிப்பிடுகின்றார். இதுவே மனிதனை அஃறிணையினின்றும் பிரித்து உயர்திணையாகக் காட்டுவது. இன்று இலக்கண இலக்கிய வளமுடைய மொழிகளெல்லாம் உடனே தோன்றியனவல்ல. மக்களின் முயற்சியால் தோற்றுவிக்கப்பட்டு நாளடைவில் வளர்ந்து

---

* In his wide life man achieves nothing so great and so wonderflu as what he achieved when he learnt to talk.

வளமடைந்தவைகளே. இத்தகைய வளமான மொழி தோன்றுவதற்கு முன்பு, மனிதன் தன் கருத்தினை மற்றவர்களுக்கு உணர்த்த முடியாத நிலையில் இருந்தான். ஆனாலும் உணர்த்தியாக வேண்டும். தன்னுடைய அவயவங்களைக் கொண்டு சைகைகளின் மூலம் கருத்தைத் தெரிவிக்க முற்பட்டான். ஓரளவுக்குத்தான் தெரிவித்தான். இச் சைகை மொழியானும் எல்லாக் கருத்துக்களையும் தெரிவிக்க முடியவில்லை. இதற்கடுத்த நிலையில் பறவை, விலங்கு மற்றப் பொருள்கள் இவைகளைக் குறித்து அவை செய்யும் ஒலிகளையே ஒலித்துக் கருத்தைத் தெரிவிக்க முற்பட்டான். காகா, கிலுகிலுப்பை முதலியன இத்தகையனவாகும். இது போலி மொழியாகும். கண்ணால் காணும் பொருள்களை மட்டும் குறிக்க இம்மொழி பயன்பட்டது. மனத்தான் அறியும் பொருள்களைத் (Abstract Things) தெரிவிக்க இம் மொழி பயன்படவில்லை. எனவே, மனிதன் காலவெள்ளத்தில் பல படிகளைத் தாண்டி இன்றைய பேச்சு மொழியைக் கண்டான். இதுவே மனித வரலாற்றின் பெரும் வெற்றியாகும்.

மனிதன் மட்டும் தன்னுடைய கருத்தைத் தெரிவிக்க முற்படுவதில்லை. உலகத்தில் இருக்கக் கூடிய உயிருள்ள பொருள்களனைத்தும் தங்கள் உள்ள உணர்ச்சிகளை மனிதன் போன்றே தெரிவிக்க விரும்புகின்றன. ஆனால் முடிவதில்லை. பல்வேறு ஒலிகளை எழுப்புவதற்கு மனிதனால் முடிகின்றது. எனவே அவைகளைக் கொண்டு எளிதில் கருத்தை உணர்த்தி விடுகின்றான். ஆனால் மற்ற உயிரினங்கள் மனிதன் போன்று பல்வேறு ஒலிகளை ஒலிக்க இயலா. உறுப்புக்களும் அங்ஙனம் அமையவில்லை. ஓரிரு ஒலிகளைத்தான் ஒலிக்க முடியும். அந்த ஒலியை வைத்துக் கொண்டு தன் கருத்தைத் தெரிவிக்க முற்படுகின்றன. பசுவைக் காணாத கன்று "அம்மா" என்று ஒலித்துத் தன்னுடையக் கருத்தைத் தெரிவிக்கின்றது. அதனால் அவ்வளவுதான் ஒலிக்க முடியும். ஆனால் மனிதன் ஒலிகள் அத்தனையும் ஒலிக்க முடிந்த காரணத்தினால் அவ்வளவையும் சொல்லிக் கருத்தைத் தெரிவிக்கின்றான். எனவே கன்றினால் பேச முடியவில்லை; மனிதனால் பேச முடிகின்றது.

இவை போன்றுதான் குழந்தையும் தன்னுடைய கருத்தைத் தெரிவிக்க முற்படுகின்றது. ஆனால் உறுப்புக்கள் வளர்ச்சியடையாத நிலையில் அதனால் பல்வேறு ஒலிகளை ஒலிக்க முடிவதில்லை. எனவே கத்துதலோடு நிறுத்திக் கொள்ளுகின்றது. அந்தக் கத்தலும் ஒருவகை மொழிதான் என்று மொழி அறிஞர்கள் கூறுகின்றார்கள். குழந்தை நிலையில் குழந்தையின் உறுப்புக்கள் வளர்ச்சி பெற்றிருக்காது. எனவே அது கத்துகின்றது. அந்தக் கத்தலை அறிகுறியாகக்

கொண்டு குழந்தையின் தேவையைக் கவனிக்க முற்படுகின்றார்கள். குழந்தையின் பேச்சு நிலையை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அவை கத்தும் நிலை (Screaming Time) மழலை நிலை (Babbling Time) பேச்சு நிலை (Talking Time) என்பனவாகும். இவ்வித நிலைகளில் குழந்தைகள், நிலைகளுக்கேற்ப தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்க முற்படுகின்றன. படிப்படியாக அவைகளின் வளர்ச்சி திருந்திய மொழி நிலையை நோக்கிச் செல்லுகின்றது எனலாம். குழந்தை பேசும் இப் பேச்சு மொழியைச் சிறு மொழி (Little language) என்றும், மக்கள் பேசும் திருந்திய மொழியைப் பொது மொழி (Cammon language) என்றும் கூறுவர்.

குழந்தையின் ஒலிக்கும் உறுப்புக்கள் போதிய அளவு வளர்ச்சியடையாத காரணத்தினால் எல்லா ஒலிகளையும் ஒலித்துச் சொற்களைத் தெளிவுற அமைக்க முடிவதில்லை. பல், இதழ், நா, அண்ணம் முதலிய உறுப்புக்களுக்குப் போதிய பயிற்சியும் வேலையும் இல்லாத காரணத்தினால் குழந்தை தன்னால் ஒலிக்க இயன்ற ஒலிகளையே ஒலித்துக் கருத்தைத் தெளிவிக்க முற்படுகின்றது. உறுப்புக்கள் இயன்ற அளவு ஒலிப்பதால் சொற்கள் முழுமையடையாது துண்டிக்கப்படுகின்றன. தேவையான ஒலிகள் சேர்ந்து சொற்கள் அமைவதற்கு மாறாக சில ஒலிகள் விடப்பட்டும் தேவையற்ற ஒலிகள் சேர்க்கப்பட்டும் சொற்களை அமைத்து வெளியிடுகின்றன. அவைகளே மழலைச் சொற்களாக மாறுகின்றன. இத்தகைய ஒலிகளைக் கேட்டுப் பெற்றோர் இன்புறுகின்றனர். இந்தச் சொற்களில் இன்பம் உண்டாவதைத் தெரிந்துதான் வான்மறை இயற்றிய வள்ளுவரும்

"குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்"

என்றார். இலக்கண வரம்புக்கும் உலக மரபுக்கும் அடங்காத அச்சொற்கள் குழல், யாழ் இவைகளின் ஒலிகளைக் காட்டிலும் இன்பம் தந்து மக்களுக்குப் பயனுள்ள மொழிகளாகி விடுகின்றன. ஆனால் இலக்கண வரம்புக்கு உட்பட்ட மொழிகளோ சில நேரங்களில் பயனில்லாச் சொற்களாகி விடுகின்றன.

ஒலிப்பதற்கு எந்த ஒலிகள் எளிமையாக இருக்கின்றனவோ அந்த ஒலிகள்தாம் குழந்தை முதலில் ஒலிக்கும். அந்த ஒலிகளை ஒலிப்பதற்கு இயற்கையாகக் குறைந்த பயிற்சி ஏற்பட்டாலும் போதும். ப(p) ப(b) ம, முதலிய ஒலிகள்தாம் குழந்தையின் வாயிலிருந்து வெளிவரும் முதல் ஒலிகளாகும். இவ்வொலிகளே மனிதனின் பேச்சு மொழிகளுக்கு ஆரம்ப ஒலிகளாகும். இவ்வொலிகளை ஒலிப்பதற்குத் துணைசெய்வது

தாயின் மார்பேயாம். குழந்தை பால் அருந்துகின்ற காரணத்தினால் அதனுடைய நா, இதழ் முதலிய உறுப்புகளுக்குப் பயிற்சி கிடைக்கின்றது. அந்தச் செயல் நிகழும்போது இரண்டு இதழ்களையும் ஒட்டி வைத்துக் கொள்ளுகின்றது. அதை விடும் நிலையில் உள்ளிருக்கும் காற்று வெளிவருகின்றது. அப்பொழுது சிறு ஒலி ஏற்படுகின்றது. இந்த ஒலி இயற்கையாக ஏற்பட்ட போதிலும்கூட குழந்தையும் அறியாமல் ஒலிக்கப்படும் முதல் ஒலிகளாகும். உதடுகளை ஒட்டி விட்டொலிக்கும் ஒலிகள் இவ்விரண்டே; இதழ்களை ஒட்டாமல் இவ்விரண்டொலிகளையும் ஒலிக்க இயலா.

இவ்வொலிகள் குழந்தையின் முதல் ஒலிகளாக இருக்கின்ற காரணத்தினால்தான் பெரும்பாலும் எல்லா மொழிகளிலும் தாய், தந்தை என்ற பொருளில் வரும் சொற்கள் இவ்வொலிகளிலிருந்து ஆரம்பிக்கின்றன. தமிழில் "ம்மா" என்ற ஒலி தாயையும் "ப்பா" என்ற ஒலி தந்தையையும் குறிக்கும் சொற்கள் இக்காரணத்தினால் அமைந்தவையே. ஒரு சில ஒலிகளை ஒலித்து உறுப்புக்களுக்குப் போதிய பயிற்சியை அளித்த பின்பு குழந்தை மெய்யொலியில் (Consonant) ஆரம்பிக்காது இரண்டிற்கும் அகர உயிரைச் (Vowels) சேர்த்துக் கொண்டிருக்க வேண்டும். வடமொழியில் மாதா, பிதா என்றும், ஆங்கிலத்தில் மதர் (Mother) பாதர் (Father) என்றும், பிரஞ்சு மொழியில் தாய்க்கு மேர் (Mere) தந்தைக்குப் பேர் (Fere) என்றும் குழந்தைகள் தாய், தந்தையரை அழைக்கும் எளிமை கருதியே இச்சொற்கள் ஆக்கப்பட்டிருக்கலாம்.

குழந்தைகள் பொதுவாக ஒலிப்பதற்குக் கடினமான ஒலிகளையெல்லாம் சொற்களில் விட்டுவிடும். ஒலிப்பதற்கு எளிய ஒலிகளை மட்டும் சேர்த்துச் சொற்களை உண்டாக்கி வெளியிடும். விட்ட ஒலிகளைப் பற்றிக் கவலைப்படுவதும் இல்லை; ஒலிகள் விடுபட்ட மழலைச் சொற்களைப் பெற்றோர்கள் புறக்கணிப்பதுமில்லை. அச்சொற்களைக் கேட்டு இன்புறுகின்றனர். உயிரொலியாகிய ஐ மெய்யொலியாகிய க(g) ட, த, ர, ல, ள, ழ, ன, வடமொழி ஒலிகளாகிய ஹ, ஷ முதலியன குழந்தைகளுக்குக் கடின ஒலிகளாகும். பெரும்பாலும் இவ்வொலிகளை விட்டும், வேறுபடுத்தி ஒலித்தும் தம் கருத்துக்களைத் தெளிவுறுத்தும், உயிரொலியாகிய 'ஐ' நாக்கினடி, மேல்வாய்ப் பல்லைப் பொருந்துகின்ற காரணத்தினால் பிறக்கின்றது. இதைக் கூறச் சிறிது முயற்சி தேவை. இச்சிறு முயற்சியையும் குழந்தை செய்யாத காரணத்தினால் இவ்வொலியை ஒலிக்க இயலாது பெரும்பாலும் அகர ஒலியோடு சேர்த்துச் சொல்லுகின்றது. சான்றாகக் குழந்தை "சைதாப்பேட்டை"

என்ற சொல்லை ஒலிக்கும் பொழுது "சதாப்பேட்டு" என்றே ஒலிக்கும். சொல்லின் முதலிலும் கடையிலும் 'ஐ' காரம் வந்தபோதிலும் அந்தச் சொல்லின் இரண்டிடங்களிலும் விடப் படுகின்றன. "சைக்கோல்" என்பதைச் "சக்கோல்" என்று கூறும். "பொம்மை" என்ற சொல்லைப் "பொம்ம" என்றே சொல்லும். அடுத்து டகர ஒலி பெரும்பாலும் குழந்தை சொல்லும் சொற்களில் வருவதில்லை. அடுப்பு என்பதை "அப்பு" என்கும்; பூட்சு என்பதைப் "பூச்சு" என்று சொல்லும். டீச்சர் என்பதை "சீச்சர்" என்றும் கொடுப்பேன் என்பதை "குப்பே" என்றும் கூப்பிடு என்பதைக் "கூபெ" என்றும் பல்வேறுவிதமாக டகர ஒலி இல்லாமல் சொற்களைக் குறுக்கியும், திரித்தும் ஒலிக்கும். பெரியவர்கள்கூட ஆகி விட்டதா என்ற சொல்லை ஆயிடுத்தா என்று சொல்லி இறுதியில் ஆயிரிச்சா என்பர். ஆங்கிலத்தில் Watch (வாட்ச்) என்ற சொல் கூட பேச்சில் டகரம் (t) விடப்பட்டு Wach (வாச்) என்றே ஒலிக்கப்படுகின்றது.

தகர ஒலியும் இதைப் போன்றதே; இதைச் சரிவர ஒலித்தபோதிலும் சிலவிடங்களில் விடுபடுவதுண்டு. புத்தகம் என்பதைப் 'புச்சகம்' என்றே சொல்லும்; குதிப்பேன் என் பதைக் 'குப்பேன்' என்று சொல்லும். கொடுப்பேன் என்ப தற்கும் 'குப்பேன்' என்றுதான் கூறும். இடம், சூழ்நிலை இவைகளைக் கொண்டு குழ்ந்தையின் கருத்தை உணர்ந்து கொள்ள வேண்டும். அடுத்து ரகர ஒலி கடினமான ஒலி எனலாம். பெரும்பாலும் எல்லாக் குழந்தைகளும் இவ் வொலியை ஒலிக்க இடர்ப்படும் எனலாம். பல குழந்தைகள் இவ்வொலி இல்லாமலேயே சொற்களை அமைப்பதும் உண்டு. பருப்பு, பப்பாகும்; செருப்பு செப்பாக மாறும்; குரங்கு கோங்கு என்று திரியும். ராத்திரி என்பதைத் தாத்திரி என்றும் ராணி என்பதைத் தாணி என்றும் கூறும். ஆங்கிலக் குழந்தை Tram (ட்ராம்) என்பதை Team (டீம்) என்றும் Room (ரூம்) என்பதை Ooem (ஊம்) என்றும் சொல்லுமாம். கழுத்து என்பதைக் கயுத்து என்றும் பழம் என்பதைப் பயம் என்றும் சொல்லும். முழு ஆரஞ்சு என்பதை முயாஞ்சி என்றே கூறும். குழந்தைமட்டுமென்ன? நாட்டுப்புற மக்கள் ழகர ஒலியை ஒலிக்காது பேசுவர். வழக்கம் என்பதை வயக்கம் என்றே ஒலிப்பர். இந்த ழகர ஒலி குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் கடின ஒலியாகும்.

மேல்வாயை நாவோரமானது தடித்துத் தடவப்பிறக்கும் ளகர ஒலியையும் குழந்தை ஒலிக்காது. ஆங்கிலக்குழந்தை Clock (க்ளாக்) என்பதை ஓக் (Ock) என்றும் Black (ப்ளாக்) என்பதைப் (பீக்) Beak என்றும் சொல்லும். தமிழ்க்குழந்தை

ப்ளேடு என்பதற்குப் பேடு என்றே கூறும். அடுத்து னகர ஒலியும் விடப்படும். மனுசன் என்பதற்கு 'மருச்ச' என்றே இயம்பும். சினிமாவைச் சிம்மா என்று மொழியும் இவ்வொலி விடப்படுவது சிறுபான்மையே. அடுத்து ஹ, ஷ என்பன கடின ஒலிகளாகும். போகப் போகின்றேன் என்பதைப் போப்போறே என்றும் விஷம்—விச்சம், நமசு—நமச்சு என்றும் ஒலித்துக் காட்டும். இங்ஙனம் சொற்களில் கடினமான ஒலிகளை விட்டுவிட்டு எளிமையாக இருக்கும் ஒலிகளைச் சேர்த்துச் சொற்களை உண்டாக்கிக் குழந்தை தன் கருத்தினை வெளியிடுகின்றது. ஒலிகள் அந்தச் சொற்களில் விடப் பட்டிருந்த போதிலும் உயிர் உள்ள சொற்களாக அவை தோற்றமளிக்கின்றன.

சொற்களில் கடினமான ஒலிகளை விடுவதோடு மட்டு மல்லாது ஒலிப்பதற்குக் கடினமான நீண்ட சொற்களையும் குழந்தை குறுக்கி விடும். தான் சொல்லுவதற்கு ஏற்றவாறு சொற்களைத் துண்டிக்கும். சீனுவாசகன் என்பதை வாசகன் என்றும் விசுவநாதன் என்பதை விச்சு என்றும் சொல்லும். பெரியவர்கள்கூட நீண்ட பெயர்களைத் துண்டித்தல் இயற் கையே கிருஷ்ண மூர்த்தி என்பதை மூர்த்தி என்றும் கிட்டு என்றும்சொல்லுவர். ஆங்கிலக் குழந்தை Elizabeth (எலிசபெத்) என்பதைப் beth (பெத்) என்றே கூறுமாம். பொருள்தரக் கூடிய சில ஒலிக் கூட்டங்களைச் சேர்த்து ஒலிப்பதே இங்ஙனம் அமைபவை. எளிமை கருதியே இங்ஙனம் ஒலிக்கப்படுகின்றன. இவைகளுக்குச் சொற் சுருக்கும் (Clippings) என்று பெயர்.

ஒருசில சொற்களைக் குறுக்கியும் விரித்தும் ஒலித்த போதிலும் கூட பல சொற்கள் குழந்தைக்குத் தெரியாது. மக்கள் பேசக்கூடிய சொற்களைக் கேட்டு அனுபவம் பெருத காரணத்தினுல் ஒரு சில பொருள்களின் பெயர்கள் அதற்குத் தெரிவதில்லை. குறுகிய அனுபவத்தை வைத்துக்கொண்டு குழந்தை தன்கருத்தைத் தெரிவிக்க முயற்சி செய்கின்றது. தனக்குத் தெரியாத பொருள்களைத் தெரிவிக்க முற்படும் பொழுதும் அப்பொருள்களின் பெயர்கள் தெரியாதபோதும் அவற்றைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. அப்பொருள்கள் எழுப்பும் ஒலிகளையே அப்பொருள்களின் பெயர்களாக வைத்துக் கொண்டு தன் கருத்தைத் தெரிவிக்கின்றது. நாயைக் குழந்தை பார்க்கின்றது. அதனுடைய பெயர் தெரியவில்லை. அது எழுப்பும் 'வவ்வவ்' என்ற ஒலியைச் சொல்லிக் கருத்தைத் தெரிவிக்கின்றது. பூனையை 'மியா' என்றழைக்கின்றது. மணியை "டிண்டிண்" என்கின்றது. காரை "பைபை" என்று சொல்லுகின்றது. ரயில் வண்டியை

'ஊ' என்கின்றது. இவ்வொலிகளை வைத்துக்கொண்டு கேட்கின்றவர்கள் குழந்தை இன்னது சொல்லுகின்றது என்று கண்டுபிடித்து விடுகின்றார்கள். அனுபவமும், பயிற்சியும் பெறாத காரணத்தினால் குழந்தைக்கு இவ்விடர்ப்பாடு ஏற்படுகின்றது. வயதும், பயிற்சியும் வளர, வளர உண்மையான சொற்களைக் குழந்தைகள் நாளடைவில் தெரிந்து கொள்ளுகின்றன.

குழந்தை எண்களை ஒலிக்கும் பொழுது கேட்கின்றவர்களுக்கு இனிமையாக இருக்கும். ஒலிகளை ஒலிக்கப் பயின்ற பொழுதே எண்ணுப் பெயர்களையும் ஒலிக்க ஆரம்பித்து விடுகின்றன. பேச்சு கற்றுக்கொடுக்கும் பெற்றோர் ஒரு சில எண்ணுப் பெயர்களையும் கற்றுக் கொடுப்பதால் அதைத்தன் நினைவில் வைத்துக் கொள்ளுகின்றன. ஒன்று, இரண்டு, என்ற எண்ணுப் பெயர்களை ஆரம்ப நிலையில் குழந்தை ஒலிக்கக் கற்றுக்கொள்ளும். ஆனால் ஒன்றுக்கும், இரண்டுக்கும் வேறுபாடு அந்த நிலையில் அதற்குத் தெரியாது. "எத்தனைப் பழம் வைத்திருக்கின்றாய்?" என்று கேட்டால் அது இரண்டிற்கு மேற்பட்ட பழங்களை வைத்திருந்த போதிலும் இரண்டு என்றே சொல்லும். ஒன்று, இரண்டு எனக் கற்ற குழந்தை மேலும் எண்ணுப் பெயர்களைக் கற்க முற்படுகின்றது. மூன்று வயதுக் குழந்தை நான்கு வரையிலும் எண்ணுவதற்குக் கற்றுக்கொள்ளுகின்றது. அதற்கு மேல் கற்கப்படும் எண்ணுப் பெயர்கள் அதற்கு நினைவில் இருந்தபோதிலும் முறை நினைவில் இருப்பதில்லை. நான்கு வரையில் எவ்வித மாற்றமும் இல்லாது முறை பிறழாமல் 1, 2, 3, 4 என்றே சொல்லிவிடும். அதற்குமேல் வரும் எண்ணுப் பெயர்கள் முறையோடு வருவதில்லை. ஆறு என்றும் எட்டு என்றும், ஐந்து என்றும் ஒன்பது என்றும் முறை பிறழ்ந்து சொல்லும். இவ்வித எண்ணுப் பெயர்களுக்கு வேறுபாடும் தெரிவதில்லை. குழந்தையை நோக்கி "நீ எத்தனை இட்லி சாப்பிட்டாய்?" என்று கேட்டால் "மூன்று என்று சொல்லும். 'சீனு எத்தனை? என்றால் "நாலு" என்றும் "பாப்பா. எத்தனை?" என்றால் 'அஞ்சி' என்றும் கூறும். "எத்தனை இட்லி வாங்கி வந்தாங்க?" என்றால் "ரெண்டு" என்று சொல்லும். இங்ஙனம் பொருள் வேறுபாடு தெரியாத அளவில் அது எண்ணுப் பெயர்களைக் கற்றுக் கொண்டிருக்கும்.

ஒப்புமையாக்கத்தின் Analogy formations மூலமாகப் பல சொற்களைத் தெரிந்துவைத்துக்கொள்கின்றது. மற்றவர்கள் பேசுவதைக் கவனித்து அதற்கியைய சொற்களை அமைத்துக் கொள்ளும் 'மாடு வந்தது' என்று கேட்ட குழந்தை

'நாய் வந்தது' என்று விரைவில் சொல்லிவிடும். 'அண்ணன் புத்தகம்' என்பதுபோல 'அக்காள் புத்தகம்' என்று எளிதில் கூறும். இங்ஙனம் ஒப்புமையாக்கத்தின் மூலமாகப் பல சொற்களைத் தெரிந்து வைத்துக்கொள்ளுகின்றது. ஆனால் இலக்கணம் குழந்தையின் ஒப்புமையாக்க மொழிகளை ஏற்றுக் கொள்ள மறுக்கின்றது. நன்கு பேசக்கற்றுக்கொண்டவர்கள்தாம் ஓரளவு இலக்கணத்தோடு மரபையொட்டிப் பேசுகின்றார்கள். குழந்தை இலக்கணத்தையும், மரபையும் பார்ப்பதில்லை; ஒப்புமையை எண்ணுகின்றது. 'அம்மா வந்தாள்' என்றுகேட்ட குழந்தை 'அப்பா வந்தாள்' என்றே சொல்லும். ஆண்பால் அப்பாவுக்குப் பெண்பால் விகுதி 'ஆள்' சேர்த்துக் கூறும். இளமைப் பருவத்தில் ஆண், பெண் என்ற வேறுபாடு அதற்குத் தெரிவதில்லை. அப்பா பெண் குழந்தையைப் பார்த்து 'நீ நல்ல பொண்ணு' என்று சொல்ல, அதே சொற்களை அப்படியே அப்பாவுக்கும் "நீ நல்ல பொண்ணு" என்று கூறும். ஆண்குழந்தை அம்மாவிடம் சென்று "நீ நல்ல பையன்" என்று சொல்லும். கேட்கின்றவர்கள் கருத்தைப் புரிந்து கொண்டபோதிலும்கூட, குழந்தை பேசும் மொழி இலக்கணத்திற்குக் கட்டுப்படாத ஒரு மொழியாக இருக்கின்றது.

குழந்தை மொழியில் வேற்றுமை உருபுகள் சேர்வதில்லை. சொற்கள் எல்லாம் வேற்றுமைத் தொகைகளாகவே இருக்கும். "அம்மா பாப்பா சீனு அடிக்கிறு" என்று வேற்றுமை உருபு இல்லாமல் சொல்லும், உருபுகளைச் சேர்க்காத காரணத்தினால் கேட்கின்றவர்களுக்கு விளங்காமல் போகும். சூழ்நிலையை ஒட்டிப் பொருளை விளங்கிக் கொள்ள வேண்டும். 'சீனு துட்டு குக்கலே" என்ற குழந்தை மொழியில் சொற்கள் மட்டும் தான் இருக்கின்றன. வேற்றுமை உருபு இல்லை; எழுவாயும் இல்லை. 'அம்மா சீனக்கு துட்டு குக்கலே' என்ற குழந்தை மொழிதான் மேற்கண்டவாறு அமைந்துள்ளது. வேற்றுமை உருபு இல்லாத காரணத்தினால் சீனு மற்றவர்களுக்குப் பணம் கொடுக்கவில்லை என்ற பொருளில் அமைந்துள்ளது. வேற்றுமை உருபினைச் சேர்த்துவிட்டால் சீனுவுக்கு அம்மா பணம் கொடுக்கவில்லை என்ற பொருள் விளக்கமாகத் தெரிந்துவிடுகின்றது. பெரும்பாலும் குழந்தைகள் வேற்றுமை உருபு இன்றியே பேசும்.

குழந்தை முக்காலத்தையும் அறியாது. சில குழந்தைகள் இரண்டு காலத்தையும் சில ஒரு காலத்தை மட்டும் தெரிந்து வைத்திருக்கும். குழந்தை தாயிடத்தில் ஏதாவது கேட்டால் "சாயங்காலம் கொடுக்கிறேன், என்று சொல்லுவாள். குழந்தை அதையே மற்றவர்கள் கேட்கும் பொழுதும் சாயங்

காலம் என்றே சொல்லும். 'அப்பா எப்போ ஆபீசு போவாரு?" என்று கேட்டால் "சாயங்காலம் போவாரு" என்று சொல்லும். "நீ எப்போ பள்ளிக்கூடம் போவெ?" என்றாலும் சாயங்காலம் என்றுதான் பதில்சொல்லும். எதைக் கேட்டாலும் சாயங்காலம் என்றே பதில் சொல்லும். அதற்கு மேல் அந்தக் குழந்தைக்குத்தெரியாது சில குழந்தைகள் காலை நேரத்தைச் சொல்லும்; சில மத்தியானம் என்று சொல்லும்; சில அப்போ, இப்போ என்று சொல்லும். மற்றவர்கள் சொன்ன முதல் சொற்கள் அப்படியே குழந்தையின் மனத்தில் பதிந்து விடுவதே இவ்வித விடைகளுக்குக் காரணம்.

குழந்தை, தான் பேசக்கூடிய மொழியின் சொற்களைப் பொருளுக்கேற்றவாறு சொல்லுவதில்லை. சில நேரங்களில் சொற்களையே மாற்றிவிடுகின்றது. பொருளைப்பற்றி அது கவலைப்படுவதில்லை. இதற்குச் சொல்மாற்றம் (Shiftings) என்று பெயர். மற்றவர்கள் பாடுவதைக் கேட்டுக் கொண்டிருந்த குழந்தை தானும் பாட ஆரம்பிக்கும். பாடலின் முதல் வரியைம்ட்டும் ஒழுங்காகப் பாடும். மற்றவை முறை பிறழ்ந்து இருக்கும்; பொருளும் மாறுபடும்.

"பொண்ணு வரா பொண்ணு வரா
பொட்டி வண்டியிலே பொண்ணைப்
பெத்த அப்பா வரா ஓட்டைவண்டியிலே
அம்மா பெத்த புள்ளை வரா
டக்கு வண்டியிலே"

இந்தப் பாடலில் சொற்கள் மாறி நின்று பொருள் வேறுபட்டு நிற்பதைக் காணலாம். "பொண்ணைப் பெத்த அப்பா வரா" "அம்மா பெத்த புள்ளை வரா;' என்ற தொடர்களைக் கேட்கும் பொழுது நம்மையும் அறியாமல் சிரித்து விடுகின்றோம். இவைகள் தாம் மழலை மொழியோ!

குழந்தை தான் பேசும் மொழியில் புதிய சொற்களையும் (Onomatopocia) உண்டாக்குகின்றது. குழந்தையோடு பழகுகின்றவர்களுக்குத்தான் அந்தச் சொற்களின் பொருள் தெரியும். மற்றவர்கள் பொருள் காண்பது அருமையே. நிலவைச் 'சந்தமாமா' என்று சொல்லும் நிழலைப் 'பூச்சி' என்றும், ஆகாயவிமானத்தை 'ஏருபெ' என்றும் கூறும். கன்னடக் குழந்தை சோறை 'புவ்வா' என்றும் புழு, பூச்சியை 'மோம்பு' என்றும் சொல்லும். இங்ஙனம் குழந்தைகளுக்குரிய சொற்கள் மொழியில் உள்ளன. குழந்தை வளர வளர அவைகள் மாறித் திருந்திய சொற்கள் வெளி வருகின்றன.

மொழி கருத்தைத் தெரிவிக்கத் துணைபுரிவது. அதைக் குழந்தை பேசும் பொழுது இன்பத்தையும் கொடுக்கின்றது. இதைக் கருதியேதான் வள்ளுவரும் "மக்கள் சொற்கேட்டல்

அவ்வையார் — இயற்கைப் புலவர்

தி. நா. அறிவு ஒளி

இயற்கையின் பேரழகிலும், வியக்கத்தக்க இயக்கத்திலும் தம் மகத்தைப் பறிகொடுத்தவர் அவ்வையார். இயற்கையின் விளைவான உலகப் பொருள்களையும், சிற்றுயிரிகளையும், விலங்கு—புள்ளினங்களையும், நிலைத்திணைகளையும், விண்ணையும் மண்ணையும், வியன்பெருங்கடலையும், பெருமலையையும், காட்டையும் அணுவணுவாகக் கூர்ந்து நோக்கி, ஆய்ந்து தெளிந்தவராக உள்ளார்.

சிறிய இயற்கை நிகழ்ச்சிகள் — காட்சிகளிலும் கூட அவ்வையாரின் பெரிய புலமை உள்ளம் ஈடுபட்டுச் சுவைத்து மகிழ்கிறது.

> இயற்கையின் ஒவ்வொரு வினையும், அறிவுடைச் சான்றோரின் உள்ளத்தில் தக்க எதிர்வினைகளை உண்டாக்குகிறது. அந்த எதிர்வினைகள் உணர்ச்சியோடு இயைந்து தெளிந்து இலக்கியமாக மலரும்போது; அக்கலையுலகில் ஓர் நுண்மையான இயற்கை உலகம் தோன்றுகிறது. நுண்

செவிக்கும் இன்பம்" என்றார் போலும். *மொழியை நன்கு பேச வேண்டுமென்றால் முதலில் அந்த மொழியைத் துண்டிக்க வேண்டும் என்கின்றது ஸ்லவோனிக் பழமொழி.

குழந்தைக்கும் அறியக்கூடிய ஆற்றல் உண்டு. ஆனால் சொற்களில் தெரிவிக்கும் ஆற்றல் அதற்கில்லை. தன்னுடைய கருத்தை ஏதாவதொரு ஓசையால் புலப்படுத்துகின்றது. கேட்கின்றவர்கள் புரியாத காரணத்தினால் வேறொன்றைச் சொல்லுகின்றார்கள். குழந்தை மறுக்கின்றது. அந்த இடத்தில் தன் கருத்தைத் தெரிவிக்க இயலாமல் இடர்ப்படுகின்றது. பெற்றோர் ஒவ்வொன்றைச் சொல்லிக் கேட்கின்றனர்: தான் குறித்த பொருள் வந்ததும் தலையை அசைக்கின்றது. இங்ஙனம் பிறந்து அனுபவம் இல்லாது மொழிப் பயிற்சி பெறாது வளரும் குழந்தை மக்களோடு, மக்கள் பேசும் மொழியோடு போராடுகின்றது. பல இடர்களைக் காணுகின்றது. இடர் ஏற்பட்டபொழுதெல்லாம் தானே திருத்திக் கொள்ள முயற்சி செய்கின்றது. அம்முயற்சியில் வெற்றி பெறுகின்றது. பல சொற்களைச் சொல்லிச் சொல்லிப் பயிற்சி அடைந்து மொழியின் வளர்ச்சி நிலைக்குச் செல்லுகின்றது. குழந்தை என்றால் எல்லோருக்கும் இன்பமளிக்கக் கூடிய பொருள்தான்; குழந்தை மொழியோ அதைவிட இன்பமளிக்கக்கூடிய பொருளாக இருக்கின்றது எனலாம்.

---

* If you wish to talk well, you must murder the language first—Slvonic proverb.

புலமையோர் படைக்கும் நுண்ணியற்கை உலகின் ஒண்மைக் காட்சிகள் •காணவும், கேட்கவும், துய்க்கவும் வியப்பு நல்கும் இயல்பினதாக உள்ளது.

அவ்வையாரின் இயற்கை விளக்கம் அகப்பாடல்களில் மிகமிகச் சிறப்பாக உள்ளது. எளிய நிகழ்ச்சிகளையும் அழகாக விளக்கும் ஆற்றல் இவரிடம் இருக்கிறது. சில சொற்களாலேயே இயற்கைக் காட்சிகளை மனத்திரையில் புனை ஓவியம் போலப் பொலிவுடன் தீட்டிக் காட்டும் திறன் பெற்றவர் இவர்.

1 உயர்ந்த மரக்கிளையில் பெண் குரங்கு (மந்தி) தன் குட்டியை நெகிழவிடாது உறுதியாகத் தழுவிக் கொண்டமர்ந் திருக்கும். அதைப்போலக் காதலன் மனவேட்கை எண்ணத் தைச் சற்றும் விலகாது அழுந்தப்பற்றி, அதற்கேற்ப ஒழுகும் தலைவியை வேண்டுகிருன் பாடலில் வரும் காதலன்.

“ ....உயர் கோட்டு
மகவுடை மந்திபோல
அகனுறத் தழீஇக் கேட்குநர்ப் பெறினே”
(குறுந்தொகை : 29)

2 குறிஞ்சிநிலம் பாலை நிலமாகத் திரிந்துவிட்டது. அக் குறிஞ்சிப் பாலை திரிந்த இயற்கைக்காட்சியை மிக அருமையாக அவ்வையார் விளக்கியுள்ளார். வெப்பமும் வேகமும் உடைய கடுமையாக வீசும் காற்றுப் பொங்கிப் பாய்கிறது. வாகை மரங்களில் வாகை நெற்றுகள் முற்றிக் காய்ந்துள்ளன. அவ் வற்றல் நெற்றுகள் காற்றின் விரைவால் ஆரவார ஓசை எழுப்புகின்றன. இத்தகைய காட்சிகளை உடைய மலைகள் வெப்பத்தாலும், காற்ருலும் சிதைந்துவிடுகின்றன. இவ்வகை யான மலைப்பாங்கானது அக்காடு.—வெம்மை, வறட்சி, கல்லும் சிதையும் கடிய வெப்பக் காற்று, வாகை நெற்றின் ஓசை, ஆகிய கொடிய காட்சியை ஓவியமாகத் தீட்டியுள்ளார் குறுந்தொகை: 39 ஆம் பாடலில். இயற்கையின் இனிமையிலும் அழகிலும் மட்டுமின்றி, கொடுமையிலும் வறுமையிலும் கூட புலமையுள்ளம் கலையுணர்வோடு ஈடுபடுவதைக் காண்கிருேம்.

“ வெம்திறல் கடுவளி பொங்காப் போந்தென
நெற்றுவிளை உழிஞ்சில் வற்றல் ஆர்க்கும்
மலைஉடை அருஞ்சுரம்”......... [குறு : 39]

உழிஞ்சிலின் நெற்றுக்கள் மிகக் காய்ந்து விட்டமை யையும், காற்றின் வீச்சினல் அவை ஒன்ருேடு ஒன்று மோதி கலகலப்பதையும், அவ்வோசை தெளிவாக அப்பாலைக் காட்டில் கேட்பதையும் விளக்கி; அந்தச் சூழ்நிலையில் தனிமை யையும், அஞ்சத்தக்க அமைதியையும் புலவர் காட்டிய திறம்

நுண்ணிய புலமைத் திறமாகும். இயற்கைக் காட்சியை உள்ளவாறே விளக்குவது அரியபணி. அதிலும் உண்மையான இயற்கையை அப்படியே பாட்டோவியமாக்கிய வள்ளுவரின் கலையாக்கம் தனிச்சீர்மையோடு பொலிகிறது.

> உலகின் கண்ணுள்ள ஒவ்வொரு அணுவும், ஒவ்வொரு சிறு நிகழ்ச்சியும் கூடப் புலவர்க்குப் புதுமையும் அழகும் வியப்பும், இன்பமும், கல்வியும், அடைவும், அக எழுச்சியும் நல்குவனவாம். இயற்கைப் படைப்புக்கள் ஒவ்வொன்றினிடமும் புலவர்கள் கல்வி கற்கின்றனர், தம் அறியாமையைக் கழுவி அறிவுத் தூய்மைப் பெறுகின்றனர். உலகில் எந்தக் கலைஞரும் இயற்கையையும், உலக வாழ்க்கையையுமே தம் ஒப்பற்ற பல்கலைக் கழகங்களாகவும், பேராசிரியர் களாகவும். கொண்டு பயின்று மேதைமை எய்துகின்றனர். இயற்கைக் கல்லூரியின் இளையற்ற மாணவர்களான தமிழ்க் கலை மேதையரின் புலமைச் சிறப்பு வியத்தற்குரியது.

அவ்வையாரோ இயற்கையின் தலைமாணக்கராக விளங்குகிறார்.

சிறிய செய்தியையும் அருமையான புதையல் போலப் போற்றித் தம் கலைச்செல்வப் பேழையில் பொதிந்து வைக்கும் புலமைச் செல்வியராக உள்ளார்.

பண்டைத் தமிழ்நாட்டில் ஒவ்வொரு ஊரிலும் பல குளங்களும் ஊருணிகளும் இருக்கும். அவற்றுக்குப் பல துறைகளும் இருக்கும். இத்தகு குளங்களின் கரைகளில் அமர்ந்து கொண்டு குளக்காட்சியையும், சுற்றுப்புறக் காட்சியையும் சுவைக்குமியல்பு அவ்வையாருக்கு உண்டுபோலும்! குளத்து நீரை ஆழ்ந்து நோக்கியுள்ளார் அவர். ஒரு குளக்கரையில் பிரப்பங்கொடிகள் அடர்ந்து வளர்ந்திருந்தன. அக்கொடிகள் ஒன்றோடொன்று பிணங்கியது போலப் பின்னியும் பிரிந்தும் அடர்ந்திருந்தன. கொடிகளில் நிறைய பிரப்பம் பழங்கள் காய்த்திருந்தன. முற்றிய பிரப்பம் பழங்களின் மேல் புறத்தில் வரிவரியான கோடுகள் படர்ந்திருந்தன. அவை எவ்வாறோ குளத்தில் விழுகின்றன. அப் பிரப்பம் பழங்களைக் குளத்தில் வாழும் கெண்டை மீன்கள் கௌவித் தின்கின்றன. இத்தகு காட்சியைத் தரும் குளிர்ச்சிமிக்க நீர்த்துறையினை கூர்த்தறிந்துணர்த்திய அவ்வையாரின் உள்ளம் நமக்குப் புலனாகிறதன்றோ? உலகின் ஒரு சிறு மூலையில் மிக அமைதியாக, யாருக்கும் தெரியாதவாறு நிகழும் நிகழ்ச்சி மீன் பிரப்பம் பழத்தை உண்பது. அதைக்கூட விடாமல் கண் காணித்து 'செய்தியாளர்' போலப் பாட்டில் வெளியிட்ட மனப்பான்மை நாம் மதித்தற்குரிய தாகும்.

> "அரில்பவர்ப் பிரம்பின் வரிப்புற விளைகனி
> குண்டுநீர் இலஞ்சிக் கெண்டை கதூஉம்
> தண் துறை........" [குறு: 91]

இயற்கையின் ஆற்றலை உணர்ந்து வியந்தவர்கள் தமிழ்ப் பெருமக்கள். இயற்கையின் பேராற்றலைப்போற்றி இலக்கியம் படைத்தவர்கள் தமிழ்ச்சான்றோர்கள். மழையின் பேராற்றலை வள்ளுவர் உணர்ந்தவர். அவ்வையாரும் மாமழையின் வல்லமையை இலக்கிய நயத்தோடு உணர்த்துகிறார்.

இயற்கையின் ஆற்றலோடு மனித உணர்வின் ஆற்றலை ஒப்பிட்டுக் காட்டி இயற்கையின் பெருமையைத் தெளிவிக்கிறார். உணர்ச்சியின் தோல்வியைக் காட்டுவது போலக் காட்டி அறிவின் வெற்றியை நிலை நாட்டுகிறார் அவ்வையார். இயற்கையைப் புகழ்ந்து புலமையின் விரிவை உறுதிப்படுத்துகிறார். வாழ்க்கையின் இன்ப—துன்பங்களைப் பகுத்து உணர முடியாத இயற்கைக்கு வாழ்க்கை அடைவினைப் பற்றி அறிவுரை கூறுகிறார். எளிய நிலையிலிருக்கும் மக்கள் உணர்வை—வாழ்க்கையை எடுத்துக்காட்டி, இயற்கையின் வல்லமையையும் தெளிவாக்கி, உலகியல் ஒழுக்கத்தின் உண்மை நிலையை உருவாக்கியுள்ளார்.

தெளிந்த புலமையின். தேர்ந்த ஆராய்ச்சியோடு இயற்கையின் திருவிளையாடலை உருவாக்கியுள்ளார்.

"நீண்டுயர்ந்த மலையின் பக்கத்தில் பாம்புகள் வாழ்கின்றன. அவை, வானம் இடிப்பதால் இறந்து விடுகின்றன. பாம்பு இறக்கும்படி அவ்வளவு வன்மையாக இடிக்கின்ற கடுமையும் விசையும் மிக்க இடியின் வலிய குரலோசையோடு கலந்து, கடிய விரைவுமிக்க காற்றும் மோத நிறைந்த சூல் கொண்ட பெரிய மழையே, நீ எங்கும் பரவிய பெரும் புகழை உடைய இமயமலையையே அசைத்து விடக்கூடிய பேராற்றல் வாய்ந்த இயல்பினை. ஆற்றல் மிக்கதாயினும், மழை பேரருளும் வாய்ந்தது. உலகுயிர்கள் வாழ்ந்து வளரவும் மழைநீரும் காற்றும் இன்றியமையா உதவி செய்வதன்றோ! அத்தகு பண்புடையதாக இருந்தும் காதலரின் துணையையும், அணைப்பையும் இழந்த பெண்டிராகிய எங்களை வருத்துவது ஏனோ? நாங்களோ இரக்கத்திற் குரியராக உள்ளோம்!' என்று பொருள்பட அமைந்த அவ்வையாரின் அருமைப் பாடல் தமிழிலுள்ள தலைசிறந்த இயற்கை விளக்க — உணர்ச்சிப் பாட்டு.

"நெடுவரை மருங்கின் பாம்புபட இடிக்கும்
கடுவிசை உருமின் கழறுகுரல் அளைஇக்
காலொடு வந்த கமஞ்சூல் மாமழை
ஆர்அளி இலையோ நீயே பேர்இசை
இமயமும் துளக்கும் பண்பினை
துணையிலர் அளியர் பெண்டிர் இஃது எவனோ?

[குறு: 158 அவ்வையார்]

நன்மையும் தீமையும் செய்யும் பேராற்றல் இயற்கையின்பால் உளது. பேரருளோடு இயற்கை பெரிதும் நன்மையே செய்கிறது. சிலபோது கொடுமை நிறைந்த இயல்போடு தீமையும் செய்து விடுகிறது. இவ்விரு இயல்பினையும் நன்காராய்ந்தவர் புலவர் பெருமாட்டி. மழை, காற்றின் விரைவோடு கலந்து பேரிடியும் மின்னலுமாக உலகை நடுக்குறுத்தும் வண்ணம் பொழிகிறது. மழையினிடையே காற்று விரைந்து ஓசையோடு வீசுவதை மிக நுட்பமாகப் புலவர் திரைப்படக் காட்சிபோல் காட்டுவது நினைந்து இன்புறத்தக்கது.

மாரிக்காலத்தில் காதலர் பிரிவது மகளிர்க்குப் பேரிடர் தரும். அதனையும் உணர்ச்சி ஓவியமாகப் பாட்டில் பெய்துள்ளார். பாடலில் மிகப்பெரிய அக உலக வாழ்க்கை அடைவு விரிந்து பரவுகிறது. பெண்மையுணர்ச்சியின் அடக்கப் பண்பையும், ஆண்மையின் ஆற்றலைநாடி அதனோடு ஒன்றினால் பெண்மை பெறும் ஆண்மையையும், அந்தக்களைகண் கிட்டினால் இயற்கையின் வல்லமையையும் வென்று செருக்க முடியும் என்று மறைமுகமாகப் பாடல் உணர்த்தும் உள் கருத்தும் எவ்வளவு எளிமையாகவும் நயமாகவும் பாடலில் செறித்து வைக்கப்பட்டிருக்கிறது! 'துணையிலர் அளியர் பெண்டிர்' என்ற தொடர் எவ்வளவு புலமைவளம் பழுனி அமைந்துள்ளது! இயற்கையை விளித்து, 'இஃது எவனோ?' என்று வினவும் நுண்மாண் நுழைபுலச் செம்மையின் செருக்கை என்னென்று போற்றியுரைக்கக் கூடும்?

> இயற்கையை எதிர்க்கும் ஆற்றல்—இயற்கையை உள்ளவாறே உணரும் ஆற்றல்—ஏற்படாதவரை மக்கள் அதைக் கண்டு அஞ்சினர். இயற்கையை நன்கு ஆராய்ந்து அறிந்த பின் அந்த அச்சம் அகன்றது. புலவர்கள் இயற்கையை உள்ளபடி உற்றுநோக்கி ஆராயும் முயற்சிகளில் தலைப்பட்டனர். இயற்கை நிகழ்ச்சிகளை அழகுபட விளக்கினர். இயற்கையின் உள்ளுறையையும், நுட்ப அறிவுரைகளையும் நுண்ணாராய்ச்சி வழி வெளிப்படுத்தினர். இயற்கைபற்றிய அறிவு, மிகமிக மாந்தர் உலகியல் வாழ்வு வெற்றி மிக்கதாக அமையலாயிற்று. அறிவின் துணையால் இயற்கையை அடிமையாக்க முனைந்தபோதுதான் புலவர்களின் நுண்ணறிவு சிறப்போடு செயற்பட்டது. இவ்வகையில் இலக்கியப் புலவர்கள் அறிவியல் கலைஞர்களோடும், ஆராய்ச்சிப் புலவர்களோடும் ஒத்த தகுதியும் சிறப்பும் பெறற்குரியராவர்.

மழையை விளக்குவதுமட்டும் அவ்வையாரின் நோக்கமன்று. வெறும் படப்பிடிப்புப் போன்ற அம்முயற்சியில் நுண்மாண் நுழைபுலச் செல்வியருக்கு ஏதொரு தனிச்சிறப்புமில்லை. மழைக்காலத்தில் அமையும் மாந்தர் உணர்ச்சி

களேயும், அதனியல்பையும் விளக்குகிருர். மாந்தர் உணர்ச்சியின்—குறிப்பாக மகளிர் உணர்ச்சியின்—மெலிவையும் அதன் எளிய, செயலற்ற நிலேயையும் தெளிவாக்குகிருர். அதனேடு பேரியற்கையின் ஆற்றலேயும், அருளேயும்: மனிதர் ஆற்றலேயும் அறிவினேயும்; துணே முயற்சியோடு முயன்ருல் இயற்கையை வெல்லமுடியும் என்ற மாந்தரினத் தந்நம்பிக்கையையும் எழிலொழுகப் பாட்டோவியமாக்கி விட்டார். அவ்வையாரின் கலேத்திறனின் மேதைமையும், புலமைச் சிறப்பும் இந்நுட்பச் செய்தியினல்தான் நனிசீரிய்தாக அமைகிறது. கலேயழகோடு அறிவாற்றல் கொள்கையை முழங்குவதில் அவ்வையாரின் இலக்கிய வெற்றி ஈடிணேயற்றது. வெற்றிப்படைப்பு இப்பாடல் என்பதில் என்னேயோ ஐயம்?

'**துணேயற்றவரை இடர்செய்வது ஆற்றலுடையார்க்கு அழகன்று**' என்ற அறிவுரையை இப்பாட்டால் தெரிவிப்பதை நுண்ணறிவால் உணரவேண்டும்.

உலகநலன் வளருமாறு, பருவகால இயல்புப்படி மழை பெய்கிறது. மழைக்குத் தலேவியை வருத்த வேண்டும் என்பது நோக்கமன்று. ஆயினும் தலேவியின் துன்ப உள்ளம், இயற்கையாகப் பெய்யும் மழைகூடத் தனக்கு எதிரியாகவே வந்து துன்பம் செய்வதாகக் கற்பனே செய்துகொள்கிறது. தன் கற்பனேயைப் பிழை என்று எவரேனும் மறுத்துவிடுவார்களோ என்று எண்ணி ஆய்வுமுறைப்படி தக்க காரணமும் காட்டுகிருள். மலேயின் காவலில் மறைவான இடத்தில் காவலோடு பதுங்கியிருக்கும் பாம்புகளேயே இம் மழையொடு கூடிய இடி அழிக்கிறது. அதுபோலத்தான் வீட்டில் மறைந்துறையும் என்னேயும் வருத்துகிறது என்கிருள். விலங்கினப் பாம்பை வருத்தும் இடிமழை மாந்தரினப் பெண்டிரை வருத்துவது இயல்பேயன்ருே! மக்களினப் பாம்பைவிட அறிவுமிக்க மாந்தரினத்தை மழை வருத்தலாமோ? முறையா? அதற்கு இடம் தந்துவிட்ட மன்பதையின் செயல், முறையா...? என்பன போன்ற மறைமுக விஞக்களெல்லாம் பாட்டில் எதிரொலிக்கின்றன.

'இஃது எவனே?' என்ற விஞவை வினவி, உலகினர் எண்ணத்தைத் தூண்டி ஆராயச் சொல்லும் அவ்வையாரின் ஆராய்ச்சியுள்ளம் வியத்தற்குரியது! வாழ்க அவ்வையின் புலமை!

பிறிதொருபாடலில் மழையின் இயல்பை வேறுவகை உணர்ச்சி நிலேயோடு விளக்குகிருர். மழைக்காலத்தில் பெய்த மழை அது. "கார்காலத்து மாலேப்பொழுதில் கருமுகிற்றிரள்கள் கூடின. இனிய இசைபோன்ற இடியோசையை

முழக்கின. மலையும் மலைசூழ்ந்த இடங்களிலும் பெருமழை பொழிந்தது. மலையில் பெய்த மழை ஒன்று திரண்டு அருவி யாக வீழ்ந்து பெருவெள்ளமானது. மலையில் பல்வகை மலர்க் கொடிகளும் செடிகளும் மரங்களும் மிகுதியாக உண்டு. அம் மலர்களை வெள்ளம் சுமந்து ஓடிவருகிறது. இதனால் வெள் ளத்தில் பூவின் மணம் கமழ்கிறது, குளிர்ச்சிமிக்க கலங்கிய வெள்ளம் மலர்களைச் சுமந்துவீழும் எழில் கனிந்த இனிய இயற்கைக் காட்சியைக் காண்கிறாள் தலைவி. இந்தக்கார்ப் பருவத்தின் முன்தான் வெளி நாட்டிலிருந்து மீண்டுவருவதாக அவன் வாக்குறுதி நல்கினான். ஆனால், இன்னும் வரவில்லை. குறித்த காலத்தில்—இருந்தது இப்போது கார்காலம் வந்து விட்டது. மழைபெய்து புது வெள்ளமும் ஓடுகிறது. தலைவன் சொன்னசொல் தவறாமல் வரவில்லை. திண்ணமாகத் தலைவர் நம்மை மறந்து விட்டார்! அந்தோ! நாம் மட்டும் தான் அவரை நினைந்து (மறவாமல் — மறக்கமுடியாது.) நினைந்து ஏங்கித் துன்புறுகிறோம்" என்ற தலைவியின் உரை நம் முள்ளத்தை ஈர்க்கும்.

"பெய்த குன்றத்துப் பூநாறு தண் கலுழ்
மீ மிசைத்தாஅய வீஇ சுமந்துவந்து
இழிதரும் புனலும் வாரார் தோழி,
மறந்தோர் மன்ற; மறவா நாமே.
காலமாரி மாலை மாமழை
இன்னிசை உருமின முரலும்
முன்வரல் ஏமம் செய்து அகன்றோரே." [குறு: 200.]

பாம்புகள் அழியுமாறு இடிக்கும் இடி என்ற முன் பாட்டில் குறித்த அவ்வையார், இப்பாட்டில் 'இன்னிசை முரலும் உருமின' என்றார்.

மக்கள் மனப்பான்மைக்கு ஏற்பவே இயற்கையை மதிப்பீடு செய்கின்றனர் என்ற உண்மையையும், இயற்கை இயல்பாகச் செய்யும் செயல்களை மக்கள் உணர்ச்சிவாயிலாக அளந்தே கருத்து கூறுகிறார்கள் என்பதையும் ஒப்பிட்டுரை அவ்வையார் இவ்விருபாக்களால் வாய்ப்பளிக்கிறார்.

இயற்கையே எங்கும் அமைந்துள்ளது மக்களும் இயற்கைப் படைப்பின் ஒரு கூறுதான். மக்கள் தாமாகப் படைப்பதாகக் கூறுவனகூட இயற்கையில் தோன்றிய பொருள்களைக் கொண்டே செய்யப்படுபவைதான். இயற்கை ஆட்சியின் இடையே இயற்கையின் குழந்தையான மனிதன் இயற்கையைப் பாட்டிலும் இலக்கியத்திலும் பேரளவில் ஆள்வதில் வியப்பில்லை. அவ்வையின் பாட்டில் பெரும்பாலான பகுதி (ஏழு அடியுள்ள பாடலில் நாலரை அடி இயற்கை விளக்கமாக அமைந்துள்ளது) இயற்கை விளக்கமாக இருப்பது இந்நுட்பத்தைக் காட்டத்தான் போலும்!

(தொடரும்)

சங்ககாலப் புலவர் பலரும் இயற்கைக்கே மிகுதியான இடமும் விளக்கமும் கொடுத்துள்ளனர்.

மழைவிளக்கத்தோடு மட்டுமின்றி, கார்ப்பருவத்துச் சூழ் நிலைகளையும், நிலைத்திணையியல்பையும் குறுந்தொகை 183 ஆம் பாடலில் அவ்வையார் தீட்டியுள்ளார்.

முதுவேனிற் பருவம் வெப்பம் மிக்கது. அக்காலத்தில் நிலைத்திணை (மரஞ்செடி கொடிகள்) வாடிப் பொலிவழியும். அதுபோலவே காயா மரத்திலுள்ள பூக்கள் மலரும் கொம்புகள் முதுவேனிலால் பொலிவின்றி வாடியிருந்தன. கார்ப்பருவம் வந்ததும் காயாவின் கிளைகள் மயிலின் கழுத்தைப் போல எழிலும் ஒளியும் மிக்க பூக்களால் நிறைந்து சிலிர்த்தன. இத்தகு மரங்கள் செறிந்த காட்டிடங்கள் கொண்ட புல்லிய நிலங்கள் நம் காதலர் சென்ற நாட்டில் மிகுதி. அங்கேதான் அவர் தங்குவார். அக்காடுகளில் கொன்றை மரங்களும் மிகப் பல உண்டு. கார்காலம் வந்ததும் அவை பூக்கும். அக்கொன் றைப் பூக்கள் நம் உடலிலுள்ள பசலை எப்படிப் பொன்னிறமாக இருக்கிறதோ; அதுபோல மஞ்சள் நிறமாக இருக்கும். அத்தகு கொன்றைக்கானத்தில், சிறிய தலையையுடைய பெண்மான்களைப் பிரியாமல் ஆண்மான்கள் (இரலை) கூடி இணை இணையாகப் புல்மேயும் காட்சிகளைக் காணமாட்டாரா? (கண்டால், உடனே என் நினைவு தோன்றி, உடனே இங்கு வந்திருப்பாரே! என்பது அவள் கருத்து.)

மானினத்தில் கூட ஆண்மான் (இரலை) பெண்மானைப் பிரியாமல் புல்லுண்டு இல்லறம் ஆற்றுகிற தென்றால், மாந்த ரினத்தினராகிய இவர் மட்டும் தன் துணைவியைப் பிரிந்து தனித்துறைகிறாரே பொருள் நசையால்! இது முறையா?' எனத் தலைவி எண்ணிப் பேசுகிறாள்.

இப்பாட்டில் விளக்க அழகு மிகுந்துள்ளது. 'கொன்றை அம் பசுவீ' (அழகிய பசுமையான கொன்றைப் பூக்கள்) 'சிறுதலைப்பிணை' (சின்ன தலையை உடைய பெண்மான்) 'நெறிகோட்டு இரலை மான்' (முறுக்கியது போன்ற அறல் பட்ட கொம்பினைக் கொண்டிருக்கும் ஆண்மான்) என்ற தொடர்கள் சுருங்கிய சொற்களால் தெளிவாக விளக்கப் படுவது கருதற்குரியது.

காயாவின் பூக்கள் மயிலின் கழுத்து நிறமாக (நீலம்) இருக்கும். பொருந்திய நிற ஒற்றுமை உடைய இருபொருள் களை உவமித்த உவமைத்திறம், அவ்வையார் இயற்கையின் நிற பேதங்களை நனி கூர்ந்து நோக்கியறியும் நுண்ணோக்காற் றலைக் காட்டுகிறது.

" வினைபயன் மெய் உரு என்ற நான்கே
வகைபெற வந்த உவமத் தோற்றம் :"

[தொல் : உவமையியல் : 272]

என்ற தொல்காப்பிய நூற்பாவில் உவமை நிறத்தானும் அமைதலே வேண்டும். அதற்கேற்ப, காயாம் பூக்கள் மலர்ந்த காட்சி மயில் கழுத்தின் நிறத்தோடு ஒத்தது என்ற உவமை யாட்சியின் இயற்கை யமைதியும் இலக்கிய மாட்சியும் தெளியலாம்.

" சென்ற நாட்ட கொன்றை அம் பசு வீ
நம்போல் பசக்குங் காலைத் தம்போல்
சிறுதலைப் பிணையின்தீர்ந்த நெறிகோட்டு
இரலை மானையும் காண்பர் கொல் நமரே!
புல்லென் காயாப் பூக்கெழு பெருஞ்சினை
மென்மயில் எருத்தில் தோன்றும்
கானவைப்பின் புன்புலத் தானே."

[குறுந்தொகை : 183]

இயற்கைப் பொருள்களைத் 'தொடுகையுணர்வாலும்' உணர்ந்து சுவைத்தவர் என்பதைப் பாடலின் சொல் லாட்சிகள் காட்டுகின்றன. 'கொன்றை அம் **பசுவீ**', '**மென் மயில்**, எருத்தம்,' '**புன்புலம்**' போன்ற தொடர்களால் பொருள்களின் இயல்பான உருவத் தொடுகையுணர்வைக் கற்போர்க்கும் காட்டும் தகையனவாய்ப் பாட்டில் ஆளப் பட்டுள்ளமை நுண்ணிய சொல்லாட்சித் திறமாகும். கான வைப்பு, பூக்கெழுபெருஞ்சினை, 'நெறிகோடு' என்ற தொடர்கள் அவ்வையாரின் நுண்ணிய பார்வையாற்றலையும், தாம் கண்ட காட்சியை அவ்வண்ணமே எழுத்தோவியமாக்கும் புலமையையும் நிறுவுகின்றன. இப்பாவினும் ஏழடிகளில் அனைத்தும் இயற்கை விளக்கமாகவே அமைந்துள்ள நுட்பம் உன்னத்தக்கது.

"அடுத்தொரு பாடலில் முன்பனிக் காலமும், கார் காலமும் அவ்வையாரால் குறிக்கப்படுகின்றன. காட்டில் மரங்கள் ஒன்றோடொன்று மிக நெருங்கி அணைந்து கொண்டிருப்பதைப்போல இருக்கின்றன. இடமகன்ற அக் காட்டில் வாட்டமுற்றுப் பொலிவற்றிருக்கும் ஞெமை என்ற மரத்தின்மீது பேராந்தை அமர்ந்திருக்கிறது. பொற் கொல்லன் பணிசெய்யும் போது சுத்தியால் பட்டறையில் தட்டுவதனால் எழும் ஓசையைப் போன்ற ஓசையை அப் பேராந்தை எழுப்பிக் கூவுகிறது! இத்தகு சூழ்நிலையுள்ள காலத்தில்தான் தலைவன் பிரியலானான். அவன் தேரில் பல மணிகள் கட்டப்பட்டிருந்தன. அத்தேரில் ஏறி மேற்குறித்த காட்டிற் செல்லும்போது ஆங்குள்ள மேட்டு நிலங்களில் ஏறி

இறங்கும்போது தேரின் மணிகள் ஆரவார ஒலி எழுப்பின. இப்பனிக் கடுநாளில் சென்ற தலைவன் காட்டில் முகில் வானில் எழுந்தது திரிதலைக் கண்டான். அதனால் காடு குளிர்ச்சி யடைந்த. அவன் மார்பில் மணம் கமழும் சாந்தம் அணிந் துள்ளான். அதன் குளிர்ச்சியைவிடக் குளர்ச்சியுடைய இனிய பன்பினளாய தலைவன் மீண்டும் வந்து விட்டான்......"

உவமைச் சிறப்பும் இயல்பு நவிற்சியும் நனிசிறந்த பாட்டு இது.

"மரந்தலை மணந்த நனந்தலைக் கானத்து
அலந்தலை ஞெமையத்து இருந்த குடிஞை
பொன்செய் கொல்லனின் இனிய தெளிர்ப்பப்
பெய்ம்மணி ஆர்க்கும் இழைகிளை நெடுந்தேர்
வன்பால் முரம்பில் நேமி அதிரச்
சென்றிசின் வாழியோ பனிக்கடு நாளே
இடைச்சுரத்து எழிலி உரைத்தென மார்பில்
குறும்பொறிக் கொண்ட சாந்தமொடு
நறுந்தண்ணியன் கொல் நோகோ யானே."

(நற்றிணை :394)

மேட்டுநிலத்தில் தேர்உருளை ஏறி விழுந்து மணி ஒலிக்கச் செல்கின்ற இயற்கையான நிலையை, 'வன்பால் முரம்பில் நேமி அதிரச் சென்றிசின்' எனக் குறிப்பிடுவது அவ்வையாரின் நுட்பப் புலனுணர்வுக்கு ஒப்பில் சான்றும். தலைவன் மார்பில் பூசப்பட்டுள்ள சந்தனத்தில் சிறுசிறு புள்ளிகள் அமைந்துள்ளமையை விடாது 'மார்பில் குறும்பொறிக் கொண்ட சாந்தமொடு' எனக்குறிப்பது உற்றுநோக்கு மாற்றலையும், சிறிய காட்சியையும் அரியகலைப் பண்போடு விளக்கும் மாட்சியையும் காட்டும். 'மரந்தலை மணந்த நனந்தலைக் கானம்' என்ற தொடர் சொல்லாட்சி நலன் கனிந்தது.

அகநானூறு 273 ஆம் பாடலில் பனிக்கால இயற்கைக் காட்சி ஒரு நாடக ஓவியமாக விரிகிறது. நுட்பமான உணர்ச்சி நலனும், உலக இலக்கியத் தகுதி வாய்ந்ததுமான இவ்வெற்றிப்பாடல் அவ்வையின் மேதைப் புலமைக்கு ஈடிணை இல்லா எடுத்துக்காட்டு.

'கூதளம் பூவால் கட்டப்பட்ட மாலையை வானத்தை நோக்கி விசையாக விட்டெறிந்தால் அது எவ்வாறு வானில் பறக்கும்போது தோன்றுமோ; அதைப்போல பசிய கால் களையுடைய வெள்ளாங் குருகு தாவி அசையும் தன் சிறகை வளைத்துப் பறந்து வளம் மிகுந்த கடற் பக்கத்தில் விடியற் காலையில் பரவி அமர்கின்ற காலம் இப்பனிக்காலம். விளை

நிலங்கள் தம் கதிர்களை ஈன்றன. அவ்வினைகை நீங்கிவிட்ட பருவம் இது. இந்த அற்சிரப் பருவத்தை மகளிர் துன்பம் தருவதாகக் கருதி வருந்துவது இயல்பு!

"விசும்பு விசைத்து எறிந்த கூதளங் கோதையிற்
பசுங்கால் வெண்குருகு வாப் பறை விளைஇ
ஆர்கலி வளவயிற் போதொடு பரப்பப்
புலம்புனிறு தீர்ந்த புதுவால் அற்சிரம்"

(அகம் : 273)

வெண்குருகு வானில் பறந்து பின் கீழே இறங்கி சிறகைப் பரப்பி அமரும் காட்சிக்கு வானில் வீசி எறிந்த கூதளங் கோதையை உவமையாக்கிய புலமையாற்றல் புத்தம் புதியதாகும். அவ்வையாரின் கலைநயமும், கற்பனை வளமும் எல்லை யிகந்து அரும்பணி செய்துள்ளது என்றால் அது மிகையில்லை! ஈன்ற அணிமை நீங்கிய விளைநிலத்தின் காட்சியைக் குறிப் பிட்டுப் பனிக்காலத்தைக் குறிப்பிட்ட முறை அவ்வையாரின் சீரிய மேதைமைக்குத் தக்க சான்றாகும். மக்கள் உழைப்பும், இயற்கை அமைப்பும் எவ்வாறு பொருந்தும் தன்மையன என்பதை இவ்வடியால் பெறவைத்தார்.

காலநிலை, சூழ்நிலை, இயற்கையமைப்புநிலை, உணர்வுநிலை, அறிவுப்பயிற்சி ஆகியவையே மக்கள் வாழ்க்கை முறையை— ஒழுக்க இயக்கத்தை—உருவாக்குகிறது என்ற பேருண்மையை அவ்வையார் இப்பாடலினால்—**நுண்கருத்தாகக்** கூறியுள்ள மையை நம் நுண் மாண் நுழைபுல ஆய்வால் உய்த்தறிந்து உவக்க வேண்டும்.

காட்டின் எழிலில் தம் முள்ளத்தை இழந்த இயற்கைச் சுவைஞர் அவ்வையார் என்பதை அகம் 11 ஆம் பாடல் நிலை நாட்டுகிறது. அப்பாடலில் இயற்கைக் காட்சிகளையும், பொருள்களையும் அவர் மிகமிகப் புதிய உவமைகளாலும், நயநாகரிக மொழிகளாலும் விளக்குவதைக் காணும்போது நாம் வியப்பின் எல்லையை எய்துகிறோம். அஞ்சொல் நுண் தேர்ச்சி செஞ்சொற் புலவர் அவ்வையார் என்பதை இப் பாடலை மேற்போக்காகக் கற்போரும் திண்ணமாக அறிய முடியும். ஆழ்ந்து சுவைக்கச் சுவைக்க இப்பாடல் ஒரு கலைக் கருவூலமாக விளங்கும் திறத்தினை ஆய்வோர் தேர்வர்.

வானத்தில் ஊர்ந்து செல்லும் விளங்கும் ஒளியுடைய மண்டிலமான ஞாயிறு நெருப்பைப் போலச் சிவந்து விளங்கு கிறது. கதிரவனின் வெப்பத்தால் காட்டில் வெப்பம் மிகுந் துள்ளது. அக்காட்டில் நிறைய இலவ மரங்கள் உள்ளன. மரக்கொம்பிலெல்லாம் சொல்லிமுடியாத இலவம் பூக்கள் பூத்துள்ளன. ஓர் இலைகூட இல்லை. ஒரு மொட்டுகூட இல்லை.

அவ்வளவும் முழுதும் மலர்ந்த புதுப் பூக்களே! இக்காட்சி எப்படி ஆரவாரம் செய்யும் பெண்டிர் கூட்டம் திருவிழா நாளில் அழகுமிக்க சுடர் வீசும் நீண்ட வரிசையாகவும் ஒழுங்காகவும் அமைத்த விளக்குக் குழுவைப்போலத் தோன்றுகிறது. காட்டிலுள்ள கயங்கள் (குளங்கள்) நீரின்றி வறண்டு துகள் பிளவுகளாக உள்ளன. இத்தகு காட்சிவழங்குகிறது பயன் (வளமை) தப்பிவிட்ட காடு." என்ற கானக்காட்சி ஓவியம் அழியாத் தமிழ்ப் பாட்டோவியமாகும்.

"வானம் ஊர்ந்த வயங்கொளி மண்டிலம்
நெருப்பெனச் சிவந்த உருப்பு அவிர் அம் காட்டு
இலைஇல மலர்ந்த முகைஇல் இலவம்
கலிகொள் ஆயம் மலிபுதொகுபு எடுத்த
அம்சுடர் நெடிங்கொடி பொற்பத் தோன்றிக்
கயந்துகள் ஆகிய பயம்தபு கானம்"- [அகம் : 11]

கலையழகுணர்ச்சி இப்பாட்டில் மிகுந்திருக்கிறது. இன்பமும் மென்மையும் வாய்ந்த உவமையை வெம்மையும் வறட்சியும் வாய்ந்த காட்டிலுள்ள இலவம் பூக்காட்சிக்கு அமைத்த அவ்வையாரின் உட்கோள் உன்னுதற்குரியது. பாட்டின்திறன் நோக்கியும், செய்தியின் உணர்வு வளன் நோக்கியும் பொருத்தமான உவமையாட்சியை அவ்வையாரின் உள்ளம் தேர்ந்தெடுத்து அமைத்துள்ளது.

"பெண்கள் தம் மார்பில் அணியும் 'கச்சு' என்னும் அணியை விரித்துத் தரையெங்கும் பரப்பிவைத்தால் எப்படி இருக்குமோ; அதுபோல காட்டாற்றின் கரையில் மணல் அலையலையாக அமைந்துள்ளது. அளவின்றி நிறைந்துள்ள பூங்கொத்துக்கள் பொலிகின்ற மரக்கிளைகள் மணல் மேட்டை நோக்கித் தாழ்ந்துள்ளன. அம்மரங்களின் குளிர்ச்சியும் நிழலும் அக்காறாற்றின் கரையில் படுகின்றன. அத்தகைய கரைகளில்—ஆற்று மணல் பஞ்சணையில்—உடலினுள் உடல் ஒன்றோடு ஒன்று புகுந்திருப்பதைப் போலக் கைகள் மிகவும் அவாவும் புணர்ச்சியினை அன்புமிகக் காதலர் பெறுவது இயல்பு.—என்ற இந்த இயற்கை விளக்கம் பல்லாற்றானும் சுவையும் நயமும் உடையது.

"வம்பு விரித்த அன்ன பொங்குமணல் கான் யாற்றுப்
படுசினை தாழ்ந்த பயில் இணர் எக்கர்
மெய் புகு வன்ன கைகவர் முயக்கம்
அவரும் பெறுகுவர் மன்னேநயவர்." [அகம் ; 11]

பெண்கள் மார்புக்கச்சை விரித்துப் பரப்பியது போன்றது ஆற்றுமணலில் தோன்றும் அலையலையான மணல்வரிகளின் அமைப்பு என்ற உவமை விளக்கும் எத்துணை புதியதும் இயல்பானதுமாகும்! நினைத்து நினைத்து உவத்தற்குரிய எழிலுணர்சி

கனிந்த இயற்கை விளக்கம் அன்றோ இது! 'வம்பு விரித்தன்ன கான்யாற்றுப் பொங்கு மணல்' என்ற தொடர் மறக்க முடியாத அழகுக் கல் வெட்டாகும்.

'வாழ்க்கையானது இயற்கையின் மடியில்தான் தாலாட்டப்படுகிறது' என்ற உண்மையை மரந்தாழ்ந்த ஆற்றங்கரை மணலில் 'மெய்புகுவன்னகைகவர் முயக்கத்தில் காதலர் திளைக்கும் அக்கால வாழ்க்கைக் காட்சியைக் காட்டுகின்ற வாயிலாக உணர்த்துகிறார்.

காட்டு ஓவியங்கள் மட்டுமின்றி, குறிஞ்சி ஓவியங்களும் அவ்வையார் பாடல்களில் மிளிர்கின்றன. அகம் 147 ஆம் பாட்டில் விலங்குகளின் வாழ்க்கை நாடகமும், மலைநிலை எழிலோவியமும் தெளிவாகக் காட்டப்படுகின்றன.

ஓங்கி நிமிர்ந்த மலையில் பிடவம் பூக்களோடு ஒன்றாகக் கலந்து வேங்கையின் மணம் கமழும் பூக்களும் பூத்துள்ளன, பூக்களின் இடையிடையே தழைகளும் பொலிகின்றன. இத்தகு பூக்களையும் தழையையும் தனித்தனியாக வகுத்து முறைப்பட அமைத்ததைப்போன்று மலைச்சாரலில் தசைக் கோளங்களின் மறைப்புக்கள் நீங்காதபடி வளைந்த உகிரைக் கொண்ட புலிக்குட்டிகள் மூன்றை ஒரே முறையில் பெற்ற பெண் புலி முடக்கமான பாறையின் பிளவில் அமைந்த குகையில் இருக்கிறது. அதற்குப் பசி மிகுந்தது அதனருகில் ஆண் புலியும் இருக்கிறது. அதன் வாய்மீது புள்ளிகள் பொலிகின்றன. அது வாயைப் பிளந்து காட்டிக் கொண்டே இருக்கிறது. அந்த ஆண்புலி, பெண்புலியின் பசிக்கு இரை தேட ஆவல் கொண்டிருக்கிறது. அப்போது எங்கோ மலைக் காட்டின் ஓரிடத்தில் முறுக்கேறியதுபோல அறல்பட்ட கொம்புகளையுடைய ஆண் மானின் குரலெழும்புகிறது. அக்குரல் ஆண் புலியின் காதில்படவே, கூர்ந்து கேட்கிறதாம்! ஆம் எந்தத்திசையிலிருந்து ஓசைவருகிறதோ; அதைக் குறிவைத்துச் சென்று இரையை அடித்துக்கொண்டு வரலா மல்லவா! இத்தகைய காட்டு வழிகள் மிக நீண்டவைகளாகவும், நுழைந்து செல்லுதற்கரிய கவர்த்த நிலையினவாகவும் இருக்குமாம்!

"ஓங்குமலைச் சிலம்பில் பிடவுடன் மலர்ந்த
வேங்கை நெறித்தழை வேறு வகுத்தன்ன
ஊன்பொதி அவிழாக் கோட்டுகிர்க்குருளை
மூன்றுடன் ஈன்ற முடங்கர் நிழத்த
துறுகல் விடர் அளைப் பிணவுப்பசி கூர்ந்தெனப்
பொறிகிளர் உழுவைப் போழ்வாய் ஏற்றை
அறுகோட்டு உழைமான் ஆண்குரல் ஓர்க்கும்
நெறிபடு கவலை நிரம்பா நீள்இடை." [அகம் : 147]

இக்காட்சியைத் தீட்டுவதில் அவ்வையாரின் புலமை மேதை மட்டுமின்றிப் பெண்மை உணர்ச்சியின் நுண்மையும், தமிழ்ப்பண்பின் ஆற்றலும்கூட அவருக்கு உதவியுள்ளமையை அறிய வேண்டும். தாய்மைஎய்திய பிணவு (பெண்புலி) பசியோடு வருந்துவதைக் காதலுணர்வாலும், ஆண்மை யிரக்கத்தாலும் உய்த்தறிந்த உழுவை (ஆண்புலி) அதற்கு ஏற்ற உணவைத்தரக் கருதியதையும், அதற்கேற்ப அதன் காதில் கேட்கும் மானின் குரலை (அதுவும் ஆண்குரலாம்! புலியின் உள்ளத்தையும் மூளையையும் கூடப் புலவர் அவ்வை யார் ஆராய்ந்தறிந்துவிடும் அரும்பேரற்றல் வாய்ந்தவர் போலும்! ஓர்ந்து செவி மடுப்பதையும் நமக்குக்காட்டி உயிரி களின் குடும்ப பாசத்தையும், அவற்றின் உணர்ச்சிப் போக்கு களையும் திட்டவட்டமாக அறிவிக்கிறார். காட்டில் கண்ணுக்குப் புலப்படாமலே; காதாலேயே செவி மடுத்திடக்கூடிய ஒலி வருவதையும்; அதைக்கொண்டு ஓசைக்குரிய உயிரியை உய்த் தறியும் வழக்கம் பண்டிருந்ததையும் இப்பாட்டால் அறிய லாம். புலிக்குட்டிகளைப் பற்றிய விளக்கமும், புலிவாழிடத் தைப் பற்றிய தெளிவுரையும் படம்பிடித்துக் காட்டப் பட்டுள்ளமை போற்றற்குரியது.

சிற்றுயிர்களின் வாழ்விலும் இத்துணை கவனம் வாய்ந்த வராக 'எவ்வுயிரும் தம்முயிர்போல்' எண்ணி வாழ்ந்த இலக்கிய உணர்வு அவ்வையாரின் பெருமைக்கு அரண் செய் கிறது. மலை நிலக் காட்சியில் புறம்: 90-ஆம் பாட்டில் ஓர் அரிய காட்சியை வரைகிறார்; உடைந்த வளையலைப் போன்ற தோற்றமுள்ள வெண்மையான காந்தள்பூ, இலைகள் மிகுந்து செழித்துள்ள குளவிச் செடியிலுள்ள குளவியம் பூக்களோடு பூத்து மணம் கமழ்கின்றன. இத்தகு மலைச் சாரலில் மறம் மிக்க புலிகள் உறைகின்றனவாம்.

> " உடை வளை கடுப்ப மலர்ந்த காந்தள்
> அடை மல்கு குளவி யொடு கமழுஞ்சாரல்
> மறப்புலி உடலின் மான்கணம் உளவோ"? (புறம்: 90)

புறம் 91 ஆம் பாடலில் மலையுச்சியிலுள்ள விடரையும், ஆண்டு இருந்த நெல்லி மரத்தையும் குறிக்கிறார்: பழையதான நிலைபெற்ற பெரிய மலையின் உச்சியிலே உள்ள விடரில் சிறிய இலைகளைக்கொண்ட நெல்லி மரம் இருந்தது. அதன் பழம் இனிமை வாய்ந்தது. என்ற கருத்தை,

> " பெருமலை விடர் அகத்து அருமிசைக் கொண்ட
> சிறியிலை நெல்லித் தீங்கனி........" (புறம்: 91)

என்ற பாடலால் குறிப்பர். நாஞ்சில் மலையில் ஒரு பெரிய பலா மரம் இருந்ததை அவ்வையார் புறம் 140 ஆம் பாடலில், " தடவு நிலைப் பலவின் நாஞ்சில் பொருநன்" எனக் குறித்

துள்ளார். மலையைச் சூழ்ந்து காடு இருக்கும் என்பதை அதே புறப் பாடலில், 'இருங் கடறு வளைஇய குன்றத்து' எனக் கூறினர்.

'கீரைகள் வீடுகளுக்குப் புறத்தே உள்ள உழுபுலங்களில் முளைத்திருக்கும்' என்ற செய்தியை, "படப்பைக் கொய்த அடகின்......" என்ற அடியில் தெளிவிக்கிறார்,

மலைக் காட்சியை மட்டுமின்றி நெய்தல் நிலத்தின் ஓவியத்தையும் நற்றிணை 187 ஆம் பாடலில் அழகொழுகப் புனைந்துள்ளார்.

"வானத்துக் கதிரவன் நிறம் சிவந்தது. மேற்குத் திசையிலுள்ள மலைகளின் கீழ் மறைவதுபோல மாயத் தோற்றம் காட்டி ஞாயிறு மறைய முற்பட்டது. நெய்தற் பூக்கள் கூம்பின. **மரஞ்செடி கொடிகளின் நிழலும், மக்கள், விலங்குகள் நிழலும் கிழக்குத் திசையை நோக்கி நீண்டு விழுந்தன.** வெயிலின் வெப்பம் தணிந்து விட்டது. கடற்கரைச் சோலையில் அளவற்ற மலர்கள் பூத்திருந்தன. அவையெல்லாம் கூம்ப முற்பட்டு விட்டன. இருளும் மண்டி வந்ததால் கானற் சோலையின் அழகும் குன்றலாயிற்று."

"நெய்தல் கூம்ப நிழல் குணக்கு ஒழுகக்
கல்சேர் மண்டிலம் சிவந்து நிலம் தணியப்
பல்பூங் கானலும் அல்கின்றன்றே" (நற்றிணை: 187)

'ஒலியின் அமைப்புக்கேற்ப நிழலுருவம் அமைகிறது' என்ற நுண்காட்சியை அவ்வையாரின் கலைக் கண்கள் கண்டு, பல்காலும் சுவைத்தின் புற்ற நுட்பத்தை 'நிழல் குணக்கு ஒழுக' என்ற தொடர் மெய்ப்பிக்கிறது. ஒளியிருக்கும் பக்கத்திற்கு நேர் எதிரில் நிழல் விழும் என்பதை 'குணக்கு' (கிழக்கு) என்ற திசைக் குறிப்பால் காட்டினர். இருள் உலகைச் சூழ்வதைப் 'பல்பூங்கானலும் அல்கின்று' என்ற தொடரில் நயமாகக் கூறுவது சுவைத்தற்குரியது.

இயற்கைக் காட்சியை இடைவிடாது சுவைத்துத் தேர்ந்த மேதைமை இப்பாட்டில் புலனாகிறதன்றோ ?

ஞாயிற்றின் நிலை—ஒளியின் போக்கு—நிழலின் நீளம், ஆகியவை கொண்டு பண்டைக் காலத்தில் காலத்தை அளந்தனர். அவ்வுண்மைக்கொரு அகச் சான்று இந்நற்றிணைப் பாடலால் பெறுகிறோம். மாலைக் காலத்தின் இயற்கையான விளக்கமாக இப் பாட்டடிகள் பொலிவுடன் அமைந்துள்ளமை மறத்தற்கரியது.

அவ்வையார், நீர்நாய், மீன், எருது, முதலை, யானை, புலி, மான், பறவைகள், வெள்ளாங்குருகு முதலிய உயிரிகளையும்

இயற்கையமைப்பில் உள்ளவாறே தம் பாடல்களில் குறித்துள்ளமை கருதுதற்குரியது.

"பிரப்பங் கொடிகள் ஒன்ருேடொன்று பின்னிப் பிணங்கிக் கொண்டிருக்கும். அதன் கனிகளின் மீதுள்ள வரிகளைப் (கோடுகள்) போல சோடுகளைக் கொண்ட முதுகை உடையது நீர்நாய். அது காலையுணவாக வாளை மீன்களை வேட்டையாடி உண்ணும்" என்ற செய்தியை,

"அரில் பவர்ப் பிரம் பின் வரிப்புற நீர் நாய்
வாளை நாள் இரை பெறூஉம் ஊரன்"

(குறுந்தொகை : 364)

நீர்நாய் காலையில் மீன் வேட்டை ஆடுவதைக் கண்ட அவ்வையார் சுவைபட அச் செய்தியைக் குறிக்கிருர்.

அகம் : 303 ஆம் பாடலில் காட்டுவழிக் காட்சியில் 'சிள்வீடு', மீன்கள் பற்றிய செய்திகளைக் குறிப்பிடுகிருர் அவ்வையார்.

காட்டில் காய்ந்து பட்டுப்போன மரங்கள் இருக்கின்றன. அந்த வற்றல் மரங்களில் மறைவிடங்களில் 'சிள் வண்டுகள்' வாழ்கின்றன. பல சிள்வீடு எனும் வண்டுகள் கூடி ஓசை எழுப்புகின்றன. இக் கூட்டோசை ஆரவாரம் எப்படி ஒலிக்கிறது தெரியுமா? உப்பு வணிகர்கள் கூட்டம் கூட்டமான எருதுகளை ஓட்டிக்கொண்டு அவற்றின் மீது கூலங்களை— உப்பை — ஏற்றிக்கொண்டு வாணிகம் செய்வதற்காகச் செல்வர். அந்த எருதுக் கூட்டங்களின் கழுத்திலிருக்கும் பல மணிகள் அசைந்து பேரோசை எழும். அதைப் போலிருக்கிறதாம் சிள்வீடுகளின் கூக்குரல். இத்தகைய காடுகளைக் கடந்தே பண்டை ஆண் மக்கள் பொருளீட்டச் செல்வர்.

"வறன் மரம் பொருந்திய சிள்வீடுமணர்
கணநிரை மணியின் ஆர்க்கும் சுரன்" (அகம்: 303)

சிள் வண்டுகளின் வீளையொலியை வயல் வெளிகளிலும், நம்மூர் வீட்டுப் புறங்களிலும் இரவில் கேட்கலாம். நிறைந்த அமைதியிருந்தால்தான் அதன் ஓசை கேட்கும். காட்டில் சிள்வண்டுகள் ஓசை கேட்கிறதென்று கூறுவதனுல், ஆங்கு, நிலவும் பேரமைதியையும், ஆளரவமோ, பிறவோ இல்லாமையையும் பெறவைக்கிருர்!

'அழிநீர் மீன் பெயர்ந்தாங்கு என்ற தொடரில் நீர்வற்றத் துவங்கினுல், அவ்விடத்திலிருக்கும் மீன்கள் நீர் நிறைந்துள்ள பகுதிகட்கு நீந்திச் சென்றுவிடும் நிகழ்ச்சியை அறிகிருேம். 'வாழ்க்கை வாழ்வதற்கே!' என்ற கொள்கையோடு மீன்கள் வாழ்க்கைப் போராட்டத்தில் 'எதிர் நீச்சல்' இட்டுச் சிறப்பதை அறிந்து வியக்கிருேம். 'வாழ்க்கையின் வெற்றிக்காகவும், தற்காப்புக்காகவும் உயிரினங்கள் இடம் பெயர்வது இன்றிய

மையாதது' என்ற கொள்கையை மீனின் வாழ்வு காட்டுகிற தன்றோ! பழகிய இடமாயினும் உதவவோ, பயன்படவோ இயலாதானால்; அதைத் துறந்து பயன்படும் இடம் நாடிச் செல்லும் இயல்பு எவ்வுயிர்க்கும் இயற்கை என்ற உண்மையை இதனால் மறைமுகமாகத் தெரிவிக்கிறார்.

குறுந்தொகை 388 ஆம் பாடலில் ஓர் அழகார் இயற்கை ஓவியம் புனைந்தளிக்கிறார் தமிழ்ப் பெருமாட்டியார். இம் முழுப் பாடலும் இயற்கை நிகழ்ச்சிகளையே நல்கக் காண்கிறோம்.

'குவளைப் பூச்செடி நீர்த் துறைகளில்—நீர் வளமிக்க இடத்தில்—விளையும் குவளைப் பூக்கள் நீரில் மேலேயே வீற்றிருக்கும். அப்பூக்களினடியிலேயே நீர் தங்கியிருக்கும் அளவு நீர் வளமுடைய இடத்திருப்பது குவளை. அத்தகு குவளையின் நிரல்பட அமைந்த இதழ்களின்மீது கோடைக் காற்று (மேல் காற்று; இது வெப்பமானது) பட்டாலும் குவளை மலர் சற்றும் வாடாது. ஏன்? நீர் வளம் இருப்பதால்!'—இந்நுண்ணருஞ் செய்தியை எடுத்துக் காட்டுவமையாக இலக்கிய நயம் மிக ஆண்டுள்ளார் அவ்வையார். மிக வியப்புக்குரிய செய்தி.

"நீர்கால் யாத்த நிரை இதழ்க் குவளை
கோடை ஒற்றினும் வாடா தாகும்" (குறு: 338)

இப் பாட்டில் பாலைநில வியல்பு விளக்கம் மிக ஒப்பற்ற வகையில் இடம்பெற்றுள்ளது.

"பிளவுபட்ட இருகிளைகளின் நுனிகளில் தோல்வாரைக் கட்டிக் **'கவண்'** செய்வது வழக்கம். கவண் எப்படி இரு கிளைகளின் முனைகளிலும் கட்டப்பட்டிருக்குமோ; அதுபோல மாடுகளைக் கட்டை வண்டியின் ஏர்க்காலில் பொருத்தி இரு முனைகளிலும் கட்டுவர். அக்கயிற்றைப் 'பூட்டுங் கயிறு' அல்லது 'பூட்டு' என்பர். இப்பூட்டு மாட்டின் மேற் கழுத்திலே பட்டுப்பட்டுத் தேய்வதால் எருது வருந்தும். இத்தகு துன்புறும் எருதுகளைத் தம் சுமை ஏற்றிய வண்டிகளிற் கட்டிக்கொண்டு உமணர் வெளியூர்கட்கு வழிச்செலவு செய்வர். இக்கூட்டத்தார் பல வண்டிகளை வரிசையாக நிறுத்தித் தங்குவர். அவ்வாறு வரிசையாக நிறுத்தப்படும் போது வண்டியிலிருக்கும் குத்துக் கோல்கள் நிரலே இருப்பதைப்போல பாலைநிலக் காட்டில் இலைகள் இல்லாத பட்ட மரங்கள் வரிசையாகப் பட்டை உரிந்து வறண்டு வற்றி நிற்கின்றன. அப் பாலை நிலத்தில் யானைகள் உணவின்றிப் பசியால் வாடுகின்றன. யானை இவ்வற்றிய மரக்கிளையை ஒடித்திடத் தன் முன்கையால் பற்றி முரித்தற்கு முயன்று, வலியில்லாமல் முரிக்க முடியாமல் தன் கையை மடித்து வளைத்துக் கொண்டு வருந்தக் கூடிய இடம் இப்பாலை நிலம்."—என்று தலைவன் உடன் போக்குக்கு உடன்பட்ட தலைவியை

அழைத்துச் செல்ல விரும்பாமல் தோழியிடம் கூறினன். ஆனல் தலைவி தலைவனோடு வாழ்வதையே விரும்பினள். ஆகவே தோழி, "அத்தகைய கொடிய பாலைக் காடும் உங்களோடு வரும்போது தலைவிக்கு இனிமையான இடமாகவே இருக்கும். உங்கள் பிரிவுதான் பாலை நிலத்தைவிடச் சுட்டுத் தீய்க்கும் கொடுமை வாய்ந்தது." என்று கூறும் பாடலே அது:

"நீர்கால் யாத்த நிரையிதழ்க் குவளை
கோடை ஒற்றினும் வாடா தாகும்
கவணை அண்ண பூட்டுப் பொருது அசாஅ
உமண் எருத்து ஒழுகைத் தோடு நிரைத்தன்ன
முளிசினை பிளக்கு முன்பு இன்மையின்
யானை கைமடித்து உயவும்
கானமும் இனியவாம் நும்மொடு வரினே" (குறு: 388)

தலைவன் நீராகவும், தலைவி குளவி மலராகவும் உவமிக்கப் பட்டனர். நீரின்றிப் பூவேது. பாலைநிலம் கோடைவளியாக (மேல் காற்று) உவமிக்கப்பட்டது. பாலைநிலத் துன்பமாகிய சிறு வெப்பத்தைத் தலைவனின் காதற்றுணை என்னும் ஈரத்தால் வென்றுவிடலாம் என்ற கருத்தை நுண்மையாகக் கூறும் அவ்வையாரின் புலமைத் திறம் நனிபெரிது! பெண்டிரின் காதலார்வம், நம்பிக்கையுணர்வு, கற்புத்திண்மை எத்தகு வன்மையும் திண்மையும் வாய்ந்தது என்பதை அழகொழுக அவ்வையார் வற்புறுத்தி நிலை நாட்டியுள்ளார்.

நுண்ணிய செய்திகளையே உவமையாக்கி ஒள்ளிய இலக்கியத் தகுதியைப் படைக்கும் ஆற்றல் அவ்வையாரின் தனியுடைமைப் புலமை!

இயற்கையின் ஒவ்வொரு அணுவையும், ஒவ்வொரு அசைவையும், கலை நலங் கனியத் திரைப்படம் பிடித்துக் காட்டுவதைப் போல அவ்வையாரின் பாடல்கள் காட்டுகின்றன. 'பாட்டு' என்ற தொலைக் காட்சியினல் இறந்தகாலத் தமிழக இயற்கைக் காட்சிகளை, நிகழ்ச்சிகளை அப்படியே காட்டும் அவ்வையார் என்ற இலக்கிய அறிவியல் மேதைக்கு என்ன கைம்மாறு ஆற்றல் கூடும்?

இயற்கையழகில் நனிஈடுபாடும், இயற்கை நிகழ்ச்சிகளைப் பற்றிப் பேரறிவும் வாய்ந்த இயற்கைப் புலவர் அவ்வையார். இயற்கைப் பல்கலைக் கழகத்தில் பயின்று பயின்றே தமிழர் வியத்தற்குரிய வினைகளை ஆற்றினர். அவ்வாறே இயற்கையை ஆழ்ந்து ஆய்ந்து, நுணுகித் தெளிந்து ஆராப் பேரின்பமுற்றும், பேரறிவு பெற்றும் சிறக்க அவ்வையாரின் நுண்புலமை நல்கும் ஒண்ணியற்கை இலக்கியச் செய்திகள் தமிழர்க்கு சாலத் துணைபுரியும்.

இயற்கையை ஆய்ந்து, இயற்கையில் தோய்ந்து, இயற்கையைச் சுவைத்து, இயற்கையின்பம் பெறுவோம்!

ஓர் இலக்கண விளக்கம்

புலவர் திரு. வை. மூ. இராமகிருட்டினன்,
தமிழ் ஆய்வாளன்.

" நடவா மடிசீ விடுகூ வேவை
நொப்போ வெளவுரி ஞண்பொருந் திருந்தின்
தேய்பார் செல்வவ் வாழ்கே ளஃகென்
றெய்திய விருபான் மூன்று மீற்றவும்
செய்யெ னேவல் வினைப்பகாப் பதமே"

(ந. சூ. 137) என்னும் நன்னூல்

நூற்பாவின் காண்டிகை உரையில், சா — 'செத்தான்' என முதல் ஆகாரம் எகரமாகி விகாரப்பட்டது என்பர். செத்தான் என்னும் முற்றின் பகுதி. 'சா' எனவும்; 'சா' என்னும் பகுதியினின்றே 'செத்தான்' என்னும் முற்று தோன்றியதாகவும் குறிப்பர். இவரே யன்றி, இலக்கண ஆசிரியர் பலரும் இவ்வாறே முடிவு கூறுவர். பள்ளிகளில், இவ்வாறே மாணவருக்கும் உணர்த்தப்பட்டு வருகிறது.

மொழியாராய்ச்சியில் பெரிதும் ஈடுபடுங்கால், இம்முடிவு எனக்குப் பொருந்துவதாகத் தோன்றவில்லை. 'முடிவு சரியன்று' எனப் பலருக்குப் படினும் இதுகாறும் தக்க விளக்கம் கிடைத்திலது. ஆகவே, இது குறித்துச்சிறிது ஆராய்வோம்.

'செத்தான்' என்னும் சொல், 'செற்றான்' என்னும் சொல்லின் திரிபேயாகும். ஆற்றின் அருகே அமைந்த ஊரான ஆற்றூர்–ஆத்தூர் ஆனதுபோல, பெற்ற ஆய்ச்சி–பெத்தாச்சி (பாட்டி) எனப் பேச்சுவழக்கில் வழங்குவதுபோல, செற்றான் என்பதே 'செத்தான்' என ஆகியது. மாற்று — மாத்து; காற்று — காத்து எனப் பேச்சு வழக்கில் எளிதாகத்திரியும். றகரம் தகர—மாதல் தமிழில் எளிய ஒன்றே.

" அறு—அறுதல்—அற்று—அற்றான்
உறு—உறுதல்—உற்று—உற்றான்
பெறு—பெறுதல்—பெற்று—பெற்றான்."

(பெற்றாள்—பெத்தாள்—பெத்தவள் : கொச்சை)

அறு, உறு, பெறு முதலான வினைமுதலடிகளினின்றும் பிறக்கும் சொற்கள் பலவும், தன்வினையாகவே விளங்குகின்றன. ஆனால், இதே அடிப்படையின் தோன்றும் வினை முதலடியான,

'செறு—செறுதல்—செற்று—செற்றான்' என்பது, 'அழி—அழிதல்—அழிந்து—அழிந்தான்' எனத் தன்வினைப்பொருள் தருவதோடன்று, 'அழித்தல் — அழித்து — அழித்தான்' என்னும் பிறவினைப் பொருள் தருமாற்றையும் கவனித்தல் வேண்டும். இதற்கு இயல்பானது, ஒப்புமைவிதிப்படி (Analogy) தன்வினைப் பொருளே.

'செற்றான்' என்பது முன்பு தன்வினைப் பொருளான் இயங்கி, 'செத்தான்' என்னும் திரிபு வழக்கத்தில் மிகுந்து தன்வினை கொள்ளவே, முன்னைய 'செற்றான்'—பிறவினைபோல இயங்கலாயிற்று. (செத்தான்' என்னும் சொல், பழம் இலக்கியங்களில் காணமுடியாவொன்று. ஆனால், 'அழிந்தான்—வீழ்ந்தான்—பட்டான்' என்னும் இறப்புப்பொருளில், 'செற்றான்' பயன்பட்டுள்ளது.

ஆகவே. 'செத்தான்' என்பது உண்மைச் சொல்லன்று. 'செற்றான்' என்பதின் திரிபே. அதனால், இதன் பகுதி 'சா' என்பதன்று, 'செறு' என்பதேயாகும்.

'சா' என்னும் பகுதி, 'சாய்ந்தான்' என்னும் சொல்லினதே. சாய்தல் என்னும் சொல்லிற்கே, 'உடைதல், சரிதல், கெடுதல்' முதலான அழிவைச் சுட்டும் பொருள்பல உண்டு. (சூ. நிகண்டு. ப. 171.)

'காய்ந்தான் — காய்தல் — காய்ந்து — காய் — காவு—கா.

வேய்ந்தான் — வேய்தல் — வேதல் — வேய்ந்து — வேய் — வேவு (சூட்டாக்கு, சூடு) — வே. (சூடு)

வீழ்ந்தான் — வீழ்தல் — வீழ்ந்து — வீழ் — வீய் — வீவு (விழச்செய், விழுப்பொருள்) — வீ, (விழும் நிலையிலுள்ளபூ)

விழுந்தான் — விழுதல் — விழுந்து — விழு — வீழ் — வீய் — வீவு — வீ.

நோய்ந்தான் — நோய்தல் நோதல் — நோய்ந்து — நோய் — நோவு — நோ, (நோய், துன்பம்) (நோஞ்சான்)

பாய்ந்தான் — பாய்தல் — — — பாய்ந்து — பாய் — பாவு (பரப்பு, பரப்பியபொருள்) — பா (பா=பரந்து செல்லும் ஓசை நச்சர்)

இவற்றை நன்கு நோக்குழி, இதன் ஒப்பியலான (Analogy), 'சாய்ந்தான்—சாய்தல்—சாதல்—சாய்ந்து—சாய் சாவு—சா (இற, இறப்பு.) என்பதே சரியான முறை என்பது பெறப்படும் 'நோ' என்னும் பகுதியின் அடியாகப் பிறக்கும்

சொற்கொடி போல, 'சா' என்னும் பகுதியில் பிறந்துள்ளன. இப்பிறப்புகளுள் 'செத்தல்' என்னும் மூலத்திற்கே இடமில்லை என்பதை யாரும் அறியலாம். ஆகவே, 'சா' என்னும் பகுதி யான் தோன்றும் முற்று 'சாய்ந்தான்' என்பதே. 'செத்தான்' என்பது ஒருக்காலும் ஆகாது. மொழி முறையிம் அன்று.

என்வே, 'செத்தான்' என்பது 'செற்றான்' என்னும் சொல்லின் திரிபே இதன் பகுதி 'செறு' என்பதாகும். 'சா' என்பது இதனோடு சற்றும் தொடர்புடையதில்லை. இது தனிப்பகுதி இதிலிருந்து பிறக்கும் வினைமூலங்கள், சாய்ந்தான் —சாய்தல்—சாதல்—சாய்ந்து—சாய்ந்த— சாயும் — சாயா — சாய்—சாவு—சாவ—சவ—சவம் முதலியன பலவாம்.

எனது இம்முடிவை அரண்செய்ய டாக்டர் கால்டுவெல் என்பாரும் துணைநிற்கிறார். 'சாய்—சா' எனத் தமிழில் வழங்குமாறு போல, துளுமொழியில் 'சா' என்பது 'சாயி' என வழங்கப்படுகிறது. இந்தத் துளுச் 'சாயி' தமிழ் 'சாய்' என்பதின் திரிபே. 'இறந்துபோ' என்பதற்கு 'சசு' என்னும் தெலுங்குச் சொல்லும் இத்திரிபான் வந்த ஒன்றே.

"சவம் (பிணம்)—சாவ, என்பன, 'சவ்' என்னும் 'போ' எனப் பொருள்தரும் வடமொழி மூலத்திலிருந்தே பிறந்தன 'சா' (சாய்) சிறிதும் ஐயுறுவதற்கு இடமில்லாதத் தூய திராவிட மூலமாகும்" என்பர் டாக்டர் கால்டுவெல். (திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் பக். 727.)

மேலும் இவர், "சாய' என்பது, மாலைப்போது, ஞாயிறு ஒருபால் சாயும் காலம் ஆதலின், தமிழ் மலையாளச் சொல் லாகிய 'சாய்' என்பதை இதன் மூலமாகக் கொள்வதே பொருத்தம் உடைத்து" எனவும் குறித்துள்ளமை அறியத் தக்கதாகும் (திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம். பக். 728)

ஞாயிறு படுங்காலத்தை எற்படுகாலை என முன்பு வழங்கினர் ஆயினும், இதுஞான்று, 'சாயங்காலம்' அதாவது கதிரவன் அழியும்--மறையும் காலம் என்னும் பொருளில் வழங்கும் அச்சொல்லே பெருவழக்கு.

இவற்றானும் மேற்கூறிய முடிவை உறுதிப்படுத்தலாம். உறுதிப்படுத்தவே, 'செத்தான்—செற்றானின் திரிபே, இதன் வினைமுதலடி 'செறு' என்பதே. 'சா' என்னும் வினைமுதலடி, இதனோடு தொடர்பின்றி—'சாய்ந்தான்' போலும் வினைச் சொற்களை உருவாக்கும் பகுதியாம்.

யவனர் சோனகரா?

த. இராமநாத பிள்ளை
புலோலி இந்துக் கல்லூரி, பருத்தித்துறை–யாழ்ப்பாணம்.

புறநானூறு பத்துப்பாட்டு சிலப்பதிகாரம் முதலிய சங்கவிலக்கியங்களில் யவனரைப் பற்றிய பல செய்திகளை யாம் காணலாம். பாவைவிளக்கு ஓதிமவிளக்கு மது பொறி முதலியன யவனர் கொணர்ந்தனர் எனவும் மிளகு முதலியன தமிழரிடம் இருந்து வாங்கிச்சென்றனர் எனவும் அறிவாம். வன்கண் யவனர் போர் வீரராயும் வாயில் காப்போராயும் மெய்காப்பாளராயும் அரசமாளிகையில் சேவித்தனர். இவ்வண்ணம் சங்ககாலத் தமிழ்மக்கள் யவனரை நன்கு அறிந்திருந்த போதிலும், சங்க நூல்களுக்கு உரைசெய்த ஆசிரியர்கள் யவனரைப்பற்றி நன்கு உணர்ந்திருந்தனர் எனச் சொல்ல முடியாது. 'குடதிசைமருங்கின் வெள்ளயிர் தன்னொடு' — (அந்திமாலை சிறப்புச் செய்த காதை–35.) என்பதன் உரையில் அடியார்க்கு நல்லார் குடதிசை என்பது யவன தேசம் என்றார். கி. பி. ஏழாம் நூற்றாண்டின் பின்பு அராபியா துருக்கி முதலிய குடதிசை நாடுகளிலிருந்து தமிழ் நாட்டிற்கு வணிகஞ் செய்ய வந்தோரை உரையாசிரியர்கள் சோனகர் என அழைத்தனர்.

" கயவாய் மருங்கிற் காண்போர் தடுக்கும்
பயனறவறியா யவன ரிருக்கையும் "

இந்திரவிழ வூரெடுத்தகாதை–அடி–10.

இதன் உரையில் யவனரை மிலேச்சர் என்றார் அடியார்க்கு நல்லார். அவ்விடத்தில் யவனரைச் சோனகர் என்றார் அரும்பதவுரையாசிரியர். இனி மதுரை வாயில் காவல் புரிந்த யவனரைத் துருக்கர் என்றார் அடியார்க்கு நல்லார்.

" கடிமதில்வாயில் காவலிற் சிறந்த
வடல்வாள் யவனர்க் கயிராது புக்காங்கு

—ஊர்காண்காதை அடி 66.

அது நிற்க, யவனரைச் சோனகர் என்றே நச்சினார்க்கினியர் கூறினர்.

'யவனர் ஓதிமவிளக்கின் உயர்மிசைக் கொண்ட'—
பெரும் பாணாற்றுப் படை அடி 316.

" மெய்ப்பைபுக்க வெருவருந் தோற்றத்து
வலிபுணர் யாக்கை வன்கண்யவனர்' முல்லைப் பாட்டு அடி 61

" யவன ரியற்றிய வினைமாண் பாவை
கையேந்தையக னிறைய நெய்சொரிந்து" நெடுநல்வாடை அடி 101

இனி

" யவனர் நன் கலந் தந்த தண் கமழ் தேறல் " (புறம் 56 அடி 18) என்பதற்கு புறநானூற்றுக்கு உரைகண்டார் யவனர் கொணர்ந்த மது என மொழிந்தனர்.

இவ்வண்ணம் ஆராயுங்கால் யவனராவார் மிலேச்சர் எனவும் துருக்கர் எனவும் சோனகர் எனவும் அழைக்கப் படுதல் காண்க. கானவராகிய அந்நியரை மிலேச்சர் என்பது தமிழ் வழக்கு. மேற்றிசைக்கண் உள்ள துருக்கி நாட்டில் வசிப்போர் துருக்கர் என அழைக்கப்பட்டனர். அராபியா துருக்கி முதலிய மேனுடுகளிலிருந்து தம் காலத்தில் வந்தோரைச் சோனகர் என அறிந்த உரையாசிரியர்கள் குடதிசைக்கண் இருந்து வந்த யாவரும் சோனகரே என எண்ணினர். யவனர் தமிழ் நாட்டிற்கு உரையாசிரியர் காலத்து வாராமையாலும் உரையாசிரியர்கள் சரித்திர நூலும் பூகோளநூலும் நுணுகி ஆராயாமையாலும் யவனரைச் சோனகர் என மயங்கினர் என்க.

ஈண்டுக் குடதிசைக்கண் யவனர் சோனகர் எகிப்தியர் உரோமர் எனப் பல சாதியினர் வதிந்தனர் என்பது அறியற் பாலது. பண்டு கிரேக்க தேசத்திற்கு அண்மையிலுள்ள அயோனியாத் தீவுகளில் வசித்தோர் யவனர் என அழைக்கப் பட்டனர். கிரேக்க நாட்டினரைக் கிரேக்கர் எனவும் எலேனியர் எனவும் உரோமர் அழைத்தனர். பின்பு யவன நாகரிகம் பரவியிருந்த கிரேக்க நாட்டை யவன தேசம் என அழைத்தல் வழக்கமாயிற்று. யவனர் கிரேக்க நாட்டிலிருந்து துருக்கிக் கரைகளிலும் இத்தாலிக் கரைகளிலும் குடியேறினர். யவனர் தமிழ் நாடு வந்தகாலம் கி. மு. 200 முதல் கி. பி. 200 ஈருன காலமெனலாம். கடைச் சங்க காலத்திற்குப் பின் யவனர் தமிழ் நாடு வரவில்லை என்பது ஒருதலை. இனிச் சோனகர் கி. பி. 800 முதல் கி. பி. 1600 வரையும் தமிழரோடு வணிகஞ்செய்தனர் என அறிவாம். இச்சோனகர் யாவரும் முகமதிய சமயத்தினரே: ஆகலின் முகமது நபி பிறந்த காலமாகிய கிபி 7ம் நூற்றாண்டுக்குப் பின்னரே சோனகர் தமிழ்நாடு வந்திருக்கலாம். முகமதிய கூட்டத்தினர் சொன்னியர் ஷீயர் என இருவகையினர். இச் சொன்னியரே சோனகராயினர் என அறிக, ஆரியக் கூட்டத்தினராகிய எலேனியரோடு கலந்த யவனர் செமிற்றிக் கூட்டத்தினராகிய சோனகர் (அராபியர்) அல்லர் என்பதைக் கடைப்பிடிக்க. இருவேறு நாட்டில் வசித்தவராகவும் இருவேறு சாதியில் உதித்தவராகவும் இருவேறு நாகரிகத்தைத் தழுவியராகவும் இருவேறு மொழி பேசுபவராகவும் இருவேறு காலத்தில் வாழ்ந்தவராகவும் கருதப்படும் யவனரையும் சோனகரையும் ஒரு குழுவினர் என மயங்கற்க.